GOKULAM

ஜனவரி 2008 ★ விலை ரூ.8/- ★ 80 பக்கங்கள்

கோகுலம்


குழந்தைகளின் குதூகலம்!

உள்ளே... அழகான டைரி 2008

கோகுலம் 25








சுட்டிப் பையன்

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


251


252


253


254


255


256


257


258


259


260


261


262


263


264


265


266


267


268


269


270


271


272


273


274


275

கல்கி

கோகுலம்

ஜனவரி 2008 மலர் : 25 இதழ் : 12

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

புத்தாண்டுச் சிறப்பிதழ்!





உள்ளே...

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட்லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி

உதவி ஆசிரியர்:
ஆரணி யுவராஜ்

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், ச.கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522 / 2225 0623
2225 1324

தொலைநகல் :
044 - 2225 1021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 25 யுஎஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!



இன்பமும் துன்பமும்

அன்புள்ள உங்களுக்கு...

இன்னொரு புதிய ஆண்டுக்குள் காலம் நம்மை அழைத்துச் செல்கிறது. இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவது இயல்புதான். அது போல் கடந்த ஆண்டில் உலகெங்கும் பல இன்பமான விஷயங்களும் துன்பமான சம்பவங்களும் நடந்தன. இந்த ஆண்டு இன்பங்கள் கூடுவதற்கும், துன்பங்கள் குறைவதற்கும் இறைவனிடம் வேண்டுவோம்.

வேண்டுதலுடன் நின்றுவிடாமல், நம்மால் இயன்ற முயற்சிகளையும் செய்ய வேண்டும். ஆணவம், பொறாமை, தானே பெரியவன் என்ற எண்ணம், பேராசை முதலிய குணங்களை மனத்தில் அண்டவிடாமல் பார்த்துக் கொண்டாலே துன்பங்கள் நெருங்காது. அன்பு, அடக்கம், அனைவரையும் மதிக்கும் குணங்களை வளர்த்துக்கொண்டால் எப்போதும் இன்பம் நம்மை சூழ்ந்திருக்கும்.

கோகுலம் அடுத்த இதழ் ஆண்டு மலராக நிறைய புதுப் பகுதிகளுடன் வரப் போகிறது. அது குறித்த அறிவிப்பு வேறு பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது. உங்களின் பங்களிப்பும் அதிகமாக இருக்கும். தவிர, உங்களை மகிழ்ச்சிப்படுத்தும் வேறு பல திட்டங்களும் உள்ளன. அதைப் பற்றி அடுத்த இதழில் விரிவாக அறிவிக்கிறோம். தயாராய் இருங்கள்!

இனிய புத்தாண்டு வாழ்த்துகள்!

அன்புடன்
கோகு

''மின்னலைப் பார்த்த பிறகுதான் நமக்கு இடி இடிக்கும் சத்தம் கேட்குது, ஏன்?''

''கண்களுக்குப் பின்னாடிதானே சார் காது இருக்கு!''

- சு.அபிராமி, காயக்காடு



''இது பொங்கலுக்கு வாங்கின சட்டையா சோமு?''

''இல்ல... எனக்கு வாங்கின சட்டை!''

- ராம் ஆதிநாராயணன், தஞ்சாவூர்





''நேத்து ஏன் டாக்டர் நீங்க ஆஸ்பிடலுக்கு வரலை.''

''ஜுரம், அதான்''

''எனக்கும்தான் ஜுரம். நான் வந்தேனே.''

- வீரணம் சரவணன்

''போன வாரம் தொலைஞ்சுபோன உன்னோட வாட்ச் அதே இடத்துல கிடைச்சுதா, எப்படி?''

''என் வாட்ச் தான் ஓடாதே!''


- மா.கண்ணன், இராஜபாளையம்


யாருக்கு வாங்கின சட்டை?




என்னைச் சாப்பிடு!


கதை: எஸ்.ஜூலியட் மரிய லில்லி   படம்: பிள்ளை







...வளர ஆரம்பிச்சுட்டே. சின்னச் சின்ன வேலைகளை இப்பவே செய்தால்தான் நல்லது. நீ இப்படி சோம்பேறியா இருந்தா யாருக்குமே பிடிக்காது, எனக்கும் பிடிக்கலை!
அம்மா மீன் கோபமாய்ச் சென்றுவிட்டது..
சோனுவுக்கு வருத்தம்.
சே! அம்மாவுக்கே என்னைப் பிடிக்கலையாம். இனிமே, நான் ஏன் இங்கே இருக்கணும்? எங்காவது போய்டலாம்!
சோனு கரையோரமாக வந்தது. அங்கே ஒரு நண்டு வலையைத் தோண்டிக் கொண்டிருந்தது.
நண்டு மாமா, எனக்கு உன் வலையில் தங்கறதுக்கு இடம் தர்றியா?
ஏன், உனக்கு யாரும் இல்லையா?
நான் சோம்பேறியாம். அதனால அம்மா துரத்திட்டாங்க.
சோம்பேறியை வெச்சுட்டு நான் மட்டும் என்ன செய்யறது? போ! போ!
பிறகு தவளையைச் சந்தித்தது.
உன்னைச் சேர்த்துக்கிட்டா என் குழந்தைகளும் சோம்பேறியாயிடுவாங்க. தயவு செய்து போய்டு!


ஒரு பெரிய மீனிடம்...
அண்ணே, எனக்கு வாழவே பிடிக்கலை. என்னைச் சாப்பிட்டுடுங்க!
பைத்தியம் மாதிரி பேசாதே. போ, அப்படி!
பிறகு -
... இதுதான் என் கதை. கொக்கு மாமா, நீயாவது என்னைச் சாப்பிடு. ப்ளீஸ்...
ஓஹோ!
நான் மீன்களைத் தின்பவன்தான். ஆனால் காத்திருந்து, வேட்டையாடிதான் தின்பேன். கஷ்டப்பட்டு உழைத்துச் சாப்பிடுவதுதான் சரி. இப்படி தேடி வருவதைச் சாப்பிட விருப்பமில்லை.
உன் அம்மா உனக்கு நல்லதுதான் சொல்கிறாள். சோம்பலை விட்டு வாழ்க்கையில் முன்னேறு. போய் வா!
என்னோட தவறு புரிஞ்சது. நான் அம்மாகிட்டே போறேன். ரொம்ப நன்றி மாமா!
சோனு உற்சாகத்துடன் தாயைத் தேடிச் சென்றது.

✉ கவிதைகள் அனைத்தும் எளிய கருத்துடன் இனிமையாக இருந்தன. சுசீந்திரம் கோயில் இசைத் தூண்களைப் போலவே, மதுரை மீனாட்சியம்மன் கோயிலிலும் தூண்கள் உள்ளன.

- ரா. கலைச்செல்வி, சென்னை

✉ நான் கோகுலம் சிறுவர் சங்கத்தில் இதுவரை சேரவில்லை. ஆகவே, எனது படைப்புகளை வெளியிட மாட்டீர்களா?

- கே.அஜீத், சேத்பட்

(உறுப்பினராக இல்லையென்றாலும் படைப்புகளை அனுப்பலாம். சிறந்தவை வெளியாகும் - ஆர்)

✉ கலை, கலாசார சிறப்பிதழில் வெளியான ஆயகலைகள் 64, இசைக் கருவிகளின் பயன்பாடு, ஜப்பான் பற்றிய தகவல் அனைத்தும் உபயோகமாக இருந்தன. பாராட்டுகள்!

- மு.சிவரஞ்சனி, வலங்கைமான்

✉ முருகா! முருகா! படக்கதையின் ஸ்டைலும், கதையும் அசத்தியது. படித்தேன்! சிரித்தேன்! ரசித்தேன்!

- த.சந்தானகுமார், பாளையங்கோட்டை

✉ டாக்டர் பக்கம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. நூடுல்ஸை தவிர்த்து இட்லியை உண்ணுங்கள் என்ற அறிவுரையை அனைவரும் பின்பற்றினால் ஆரோக்கியமாக இருக்கலாம்.

- எல்.கே.நர்கீஸ், த.முருங்கப்பட்டி

சரஸ்வதி கடாட்சம்!



✉ அட்டைப்படம் சரஸ்வதி கடாட்சமாக ஜொலித்தது. 'தஞ்சாவூர் தங்கம்' கட்டுரையும், ஸ்ரீஹரியின் புகைப்படமும் மின்னியது!

- ஆர்.ஜி.கலியாணி, திசையன்விளை

சிறுவன் நேரு!



'நந்தலாலா சிறுவர் சங்கம்' கடந்த இருபத்தைந்து வருடங்களாக சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. நவம்பர் 25 ஆம் தேதி 'சிறுவன் நேரு' என்ற கையெழுத்துப் பிரதி நூலை வெளியிட்டது. ஓவியர் வேதாவின் அழகான அட்டைப் படத்துடன் வெளியான இந்நூலில் சிறுவர்கள் தங்கள் கைப்பட எழுதிய கதை, கவிதை, கட்டுரை, ஓவியம் அனைத்தும் இடம் பெற்றுள்ளன. இந்த வித்தியாசமான முயற்சிக்கு 'கோகுலம்' பாராட்டுகளைத் தெரிவிக்கிறது. **- ஆசிரியர்**

குட்டிப் பையன் சூப்பர் ஃப்ரெண்ட்!



கிறிஸ்துமஸ் தினத்தன்று 'சாண்டா கிளாஸ்', மான்கள் பூட்டிய வண்டியில் வந்து, குழந்தைகளுக்குப் பரிசளித்து மகிழ்விப்பார் என்பது கிறிஸ்துவர்களின் நம்பிக்கை. இந்தக் காலத்தில் சாண்டா கிளாஸ் வருகிறாரோ இல்லையோ, ஹாலிவுட்டிலிருந்து திரைப்படங்கள் கட்டாயம் வருகின்றன. எப்படி இங்கே தீபாவளி, பொங்கலுக்கு அபிமான நட்சத்திரங்களின் திரைப்படங்கள் வெளியாகுமோ, அப்படி அங்கே கிறிஸ்துமஸுக்கு நிறைய படங்கள் வெளியாகும்.

2008





• கோ. கதிரவன்

பொதுவாகவே, ஹாலிவுட்டில் குட்டீஸ்களை குஷிப்படுத்தவென்றே குழந்தைகள் திரைப்படங்கள், பிரமாண்டமான செலவில் எடுக்கப்படும். அப்படி பல பிரமாண்டமான படங்களை எடுத்த 'கொலம்பியா பிக்சர்ஸ்' இந்த கிறிஸ்துமஸுக்கு (டிசம்பர் 25, 2007) அளித்துள்ள பரிசு 'தி வாட்டர் ஹார்ஸ் - லீஜண்ட் ஆஃப் தி டீப், (The water horse-legend of the deep)





நினைத்ததைவிட அது வேகமாக வளர்கிறது. அந்த மிருகத்தால் பல தொல்லைகள். இனி வீட்டில் வைத்துக்கொள்ள முடியாது என்கிற நிலை...

கடற்கரையோரம் விளையாடிக் கொண்டிருக்கும் அந்தச் சிறுவன் தண்ணீரும் சகதியும் தேங்கிய இடத்தில் ஓர் உருண்டையான பொருளைப் பார்க்கிறான். அது நீல வண்ணத்திலுள்ள ஒரு முட்டை. அதனை வீட்டுக்கு கொண்டுவந்து தனியறையில் வைத்து உடைக்கிறான். உள்ளே இருந்து விசித்திரமான உருவம் கொண்ட குட்டி தலை நீட்டுகிறது. அதனை ஒரு பக்கெட்டில் விட்டு தண்ணீரை ஊற்றுகிறான்.

அடுத்த நாள், அதற்கடுத்த நாளென அந்தக் குட்டி வேகமாக வளர்கிறது. பக்கெட் போதவில்லை. பாத்-டப்பில் விடுகிறான். இருவருக்குள் நெருக்கம் ஏற்படுகிறது. அதற்குத் தேவையான உணவைத் தருகிறான். அதனுடன் விளையாடுகிறான். பெற்றோருக்கு விஷயம் தெரிகிறது.

அம்மா, அதனைக் கொண்டுபோய் விட்டுவிடலாம் என்கிறாள். சிறுவன் அடம் பிடிக்கவே, வீட்டில் வளர்க்க அரை மனத்துடன் சம்மதிக்கிறார்கள். நினைத்ததைவிட அது வேகமாக வளர்கிறது. அந்த மிருகத்தால் பல தொல்லைகள். இனி வீட்டில் வைத்துக் கொள்ள முடியாது என்கிற நிலை. அதனை அழைத்துச்சென்று கடலில் விடுகிறார்கள். சிறுவன் - கடற்குதிரையின் நட்பு அவர்களை மீண்டும் சேர்க்கிறதா... இல்லையா? என்பது கிளைமாக்ஸ்.

சிறுவனாக அலெக்ஸ் எடெல் நடித்திருக்கிறான். இயக்கம் ஜெருஸ்ஸல்! 'மை டாக் ஸ்கிப்' என்ற படத்தின் மூலம் குட்டீஸ்களை வசியப்படுத்தியவர் இவர். அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் டிசம்பர் 25-ல் வெளியாகியுள்ள இத்திரைப் படம், இந்தியாவுக்கு அநேகமாக ஏப்ரலில் தான் வரும்.

சிறுவன் வீட்டில் விருந்தினர்கள் வந்திருக்கும் சமயம் கடல் குதிரையும், அந்த வீட்டின் மற்றொரு செல்லப் பிராணியான நாயும் சேர்ந்து செய்யும் கலாட்டா நிச்சயம் வயிறு குலுங்க சிரிக்க வைக்கும். அந்த மிருகத்தை கடலில் விடுவதற்காக அழைத்துச் செல்கையில், நாம் வளர்த்த செல்லப் பிராணியையே பிரிவது போன்ற உணர்வு ஏற்படுகிறது. கடலில் சிறுவனை தனது முதுகில் சுமந்தவாறு அது செய்யும் சாகஸம் அற்புதம்!


நேர்த்தியான ஒளிப்பதிவு, அட்டகாசமான கிரா.ஃபிக்ஸ் என அற்புதமாக தயாரிக்கப்பட்டுள்ள இப்படம் குட்டீஸ்களை நிச்சயம் குஷிப்படுத்தும்! ●

வட்டமிடுங்கள்!

குட்டீஸ் கோகுலம்



இங்கே பெரிய அளவிலுள்ள மூன்று பறவைகளும் கீழேயுள்ள
பறவைகள் கூட்டத்தில் எங்குள்ளன என கண்டுபிடித்து வட்டமிடுங்கள்!



கூஜா, ஆணி, முந்திரி!





பல நூறு வருடங்களுக்கு முன் பாரசீக நாட்டை ரேஸான் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் மிகுந்த பணத்தாசை கொண்டவன். அவனுடன் சேர்ந்து கொண்டு ராணியும் மந்திரியும் மக்களைத் துன்புறுத்தி, அதில் மகிழ்ந்தனர். அரசனின் துன்புறுத்தல் தாளாமல் மக்கள் இறைவனை நாடினர்.

ராஜா, ராணி, மந்திரி ஆகிய மூவருக்கும் அறிவுரை கூறச் சொல்லி இறைவன், தேவதைகளைத் தூது அனுப்பினார். அவர்களிடம் வந்த தேவதைகள், ''உங்களுக்கு இறைவனுடைய அருளும் இறுதி நாளில் சொர்க்கத்தில் நற்பதவியும் கிடைக்க நீதி தவறாது, ஆட்சி புரியுங்கள்'' என்று அறிவுரை கூறினர்.

அவர்கள் சிறிதுகாலம் அதன்படி நடந்தனர். பிறகு கொடுங்கோல் ஆட்சி தொடர்ந்தது. பொறுக்க முடியாத மக்கள் மீண்டும் இறைவனிடம் தங்களைக் காப்பாற்றும்படி கேட்டதற்கிணங்க, தேவதைகள், மூவரையும் சந்தித்து, ''இது தொடர்ந்தால் நீங்கள் சபிக்கப்படுவீர்கள்'' என்று கூறினர்.

இதைக் கேட்ட மூவரும் சம்மதித்தனர். எல்லாம் சிறிது காலம்தான்! மீண்டும் மக்களைத் துன்புறுத்தினர். இதனைக் கண்ட இறைவன், தேவதைகளை அழைத்து அம்மூவரையும் தண்டித்து வருமாறு அனுப்பினார். தேவதைகள், ''உங்கள் மூவரையும் தண்டித்து வருமாறு இறைவன் எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார்'' என்று கூறினர். இதைக் கேட்ட மூவரும், ''நாங்கள் அறியாமையினால் இப்படி செய்துவிட்டோம். இந்த ஒருமுறை இறைவன் மன்னிக்க மாட்டாரா?'' என்று கேட்டனர்.

ஆனால் தேவதைகளோ, ''இரண்டு வாய்ப்புகளை இறைவன் உங்களுக்கு அளித்தும் நீங்கள் திருந்தவில்லை. இது இறைவனின் ஆணை. தண்டிக்க வேண்டியது எங்கள் கடமை'' என்று கூறி, அவர்களை நோக்கி மந்திரக்கோலை நீட்டினர்.

அதன் மந்திர சக்தியினால் ராஜா, கூஜாவாக மாறினான். ராணி, ஆணியாக மாறினாள். மந்திரி, முந்திரியாக மாறினான். உடனே தேவதைகள் ஆணியை சுவரில் அறைந்து, கூஜாவை அதில் மாட்டி, முந்திரியை கூஜாவில் போட்டுவிட்டு மக்களிடம், ''இறைவன் உங்களுக்கு விடுதலை அளித்துவிட்டார். இனி நீங்கள் உங்களுக்குப் பிடித்தமான தலைவரை தேர்ந்தெடுத்து, சந்தோஷமாக வாழுங்கள்'' என்றனர்.

–எம்.எஸ்.சுஹைல் அஹ்மத்,
உறுப்பினர் எண்: 278
எட்டாம் வகுப்பு,
நேஷனல் அகாடமி ஸ்கூல்,
கீழக்கரை



பக்கம்



கும்மாங் குத்து!


எங்கள் ஊரில் சிறுவர்கள் விளையாடும்போது கேள்வி - பதில் பாணியில் பாட்டு பாடுவோம். அதில் ஒன்றை கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்களிடம் பகிர்ந்து கொள்கிறேன்.

'பன் பன் என்ன பன்? - ரிப்பன்
என்ன ரிப்பன்? - கலர் ரிப்பன்
என்ன கலர்? - பச்சை கலர்
என்ன பச்சை? - கிளி பச்சை.
என்ன கிளி? - மா கிளி
என்ன மா? - அம்மா
என்ன அம்மா? - டீச்சர் அம்மா
என்ன டீச்சர்? - கணக்கு டீச்சர்
என்ன கணக்கு? - வீட்டுக் கணக்கு
என்ன வீடு? - மாடி வீடு
என்ன மாடி? - மொட்டை மாடி
என்ன மொட்டை? - திருப்பதி மொட்டை
என்ன திருப்பதி? - வட திருப்பதி
என்ன வட? - ஆம வடை
என்ன ஆமை? - குளத்தாமை
என்ன குளம்? - திரி குளம்
என்ன திரி? - விளக்குத் திரி
என்ன விளக்கு? - குத்து விளக்கு
என்ன குத்து? - கும்மாங் குத்து!


- ஜி.சாயி லெட்சுமி,
உறுப்பினர் எண்: 257
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீ சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி,
திருநெல்வேலி







ஒன்று... இரண்டு... மூன்று...



- சீனாவில் பேசப்படும் மொழி **ஒன்றே**
- ஆப்பிரிக்க யானையின் தும்பிக்கையில் **இரண்டு** விரல்கள் இருக்கும்.
- இதுவரை **மூன்று** பேர் நோபல் பரிசினை மறுத்து இருக்கிறார்கள்.
- தேனீ, பட்டாம்பூச்சி, தட்டாரப்பூச்சி, வண்டு ஆகியவற்றுக்கு **நான்கு** இறக்கைகள்
- கழுகு **ஐந்து** நாளைக்கொருமுறை முட்டை இடும்.
- ஷேக்ஸ்பியரின் கையெழுத்துக்கள் இதுவரை **ஆறு** கிடைத்துள்ளன.
- தொண்டை **ஏழு** துவாரங்கள் கூடுமிடம் ஆகும்.
- ஆகாய விமானத்தின் சிறகுகள் **எட்டு** டிகிரி சாய்வாக இருக்கும்.
- எவரெஸ்ட் உச்சியை அடைய **ஒன்பது** வழிகள் இருக்கின்றன.
- கிளியோபாட்ராவுக்குப் **பத்து** மொழிகள் தெரியும்.
- அமெரிக்கச் சுதந்திரச் சிலையின் தலையில் தெரியும் நட்சத்திரம் **பதினொரு** முனைகளைக் கொண்டது.
- தேளின் மீது **பன்னிரண்டு** வளையங்கள் இருக்கும்.

– என்.ஆர்.ரஞ்சனி, உறுப்பினர் எண்: 75,
ஆறாம் வகுப்பு,
ஜி.ஜி.என்.மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை

தெரிந்துகொள்வோம் 2008

எஸ்.சந்திரமௌலி

ஜனவரி மாதம் முதல் தேதி உலகம் முழுவதும் புத்தாண்டு கோலாகலமாகக் கொண்டாடப்படுவது தெரியும். ஜனவரி இருபத்தாறாம் தேதி இந்தியா தனது குடியரசு தினத்தை பெருமையுடன் கொண்டாடுகிறது. இவை தவிர, ஜனவரி மாதத்தில், சில முக்கியமான தினங்கள் பற்றித் தெரிந்துகொள்வோம்:


ஜனவரி மாதம் முதல் ஞாயிற்றுக் கிழமை, அகில உலக சிரிப்பு தினமாகக் கொண்டாடப்படுகிறது. இதற்கு வித்திட்டவர் மும்பையைச் சேர்ந்த டாக்டர் 'மதன் கடாரியா'. வாய் விட்டுச் சிரிப்பது உடலுக்கும் மனதுக்கும் ஆரோக்கியம் தரும். நகைச்சுவை ரசனையும், சிரிப்பும் மனிதனுக்கு மிக அவசியம் என்பதை வலியுறுத்தவே டாக்டர் கடாரியா அகில உலக சிரிப்பு தினத்தை பிரபலப்படுத்தி வருகிறார். 1998ஆம் ஆண்டு முதல் இது கொண்டாடப்பட்டு வருகிறது. உலகின் பல நாடுகளிலும் சிரிப்பு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சென்னை மெரீனா கடற்கரையில், தினமும் காலையில் சென்னை நகைச்சுவை சங்கத்தினர் உரக்கச் சிரித்தபடியே உடற்பயிற்சி செய்வதைக் காணலாம்.

ஒரு நூறு இளைஞர்களைக் கொடுங்கள். இந்தத் தேசத்தை மாற்றிக் காட்டுகிறேன் என்று முழங்கியவர் சுவாமி விவேகானந்தர். இளைஞர்கள் நினைத்தால், நாட்டில் எதையும் சாதித்துக் காட்ட முடியும் என்று உறுதிபடக் கூறிய சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் ஜனவரி 12. எனவே, இந்த நாளை



சிரிப்பு தினம்!

இளைஞர் தினமாக இந்தியா கொண்டாடுகிறது.



ஜனவரி மாதம் பதினைந்தாம் தேதி இராணுவ தினமாகும். 1949ஆம் ஆண்டு இதே நாளில்தான், இந்திய இராணுவத்தின் தளபதியாக முதல் இந்தியர், 'லெப்டினன்ட் ஜெனரல் கே.எம்.கரியப்பா' பதவியேற்றார். இந்தச் சிறப்பைக் கொண்டாடும் விதமாக ஜனவரி 15ஆம் தேதியை **இராணுவ தினமாக** இந்திய அரசு அறிவித்தது. ஆண்டுதோறும் இராணுவ தினத்தன்று வீரச் செயல் புரிந்த இராணுவ வீரர்களையும், போரிலும், தீவிரவாதிகளுடனான மோதலிலும் ஈடுபட்டு வீர மரணம் அடைந்த இராணுவத்தினரையும் கௌரவிக்கும் வகையில் விருதுகள் வழங்கப்படுகின்றன.

தேசப்பிதா மகாத்மா காந்திஜி அவர்களின் நினைவு தினம் ஜனவரி 30. அவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஆண்டுதோறும் **தியாகிகள் தினம்** கடைபிடிக்கப்படுகிறது. அந்த நாளில் தேசத்துக்காக இன்னுயிர் நீத்த எண்ணற்ற தியாகிகளை நினைவுகூறும் விதமாக, காலை பதினோறு மணியளவில் இரண்டு நிமிடங்கள் நாடு முழுவதும் மௌன அஞ்சலி செலுத்தப்படுகிறது.



ஜனவரி 30ஆம் தேதி உலக தொழுநோய் ஒழிப்பு தினம் நடத்தப்படுகிறது. நம் நாட்டில் கி.மு.600 ஆண்டு வாக்கிலேயே தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் வாழ்ந்ததாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. அதற்கு முன்பாகவே எகிப்திலும், ஜப்பானிலும் தொழுநோய் இருந்ததாகவும் தெரிய வருகிறது. அந்தக் காலத்தில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களை மற்றவர்கள் தீண்டத்தகாதவர்களாக கருதி ஒதுக்கி வைத்திருந்தார்கள். அவர்கள் கடைத்தெரு, உணவகங்கள், ஆலயங்கள் போன்ற பொது இடங்களுக்குச் சுதந்திரமாகச் சென்று வர தடை விதிக்கப்பட்டிருந்தது. ஏரி, குளங்களில் அவர்கள் சென்று குளித்து, துணி துவைக்கவும், தண்ணீர் அருந்தவும் அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால், இன்று உலக சுகாதாரக் கழகம், உலகம் முழுவதும் தொழுநோயை முற்றிலுமாக ஒழிப்பதற்கு அரும்பாடுபட்டு வருகிறது. அதன் பலனாக 2000 ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி, உலகில் தொழுநோயால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை பத்தாயிரம் பேருக்கு ஒருவர் என்ற அளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. தொழுநோய் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அதனை முற்றிலுமாக ஒழிப்பதே உலக சுகாதாரத்தின் நோக்கம்.

ஜனவரி மாதத்தின் இதர முக்கிய தினங்கள்:

ஜனவரி 9

அயல் நாட்டில் வாழும் இந்தியர்கள் தினம்,

ஜனவரி 26

அகில உலக சுங்கவரி தினம்.

சூப்... சூப்... சூப்பர்!

கதை: ஜிங்கிள் பெல் கிரியேஷன்ஸ்

தமிழ் வடிவம்: ராஜ்










நீ இங்கேயே இரு. வந்து கவனிச்சுக்கறேன்.
மரப் பொந்தில் முயலுக்கு ஆபத்து காத்திருந்தது.
டப்லு மானை விரட்டிச் சென்றது.
ஆனால் -
ஒலிம்பிக் ஓட்டம் ஓடுதே!


பரவாயில்லை. புத்திசாலித்தனமா முயலை இங்கே வெச்சிருக்கோம்.
அடப்பாவி! முயலை முழுங்கறியா? விட மாட்டேன்.
ஐயோ! என்னை விட்டுடு.
என்னை யாரும் முட்டாளாக்க முடியாது.
ஆமா! ஆமா!

பெரிய நகரம் முதல் குக்கிராமம் வரையிலுள்ள இளம் சாதனையாளர்களை வெளிச்சமிட்டுக் காட்டும் பகுதியிது. விளையாட்டு, பேச்சு, ஓவியம் என எதுவாக இருந்தாலும் சரி, அவற்றில் மாவட்ட அளவிலோ, மாநில அளவிலோ கலந்து கொண்டு பரிசு பெற்றிருந்தால் அது குறித்த விவரங்கள், புகைப்படம், சான்றிதழின் நகல் ஆகியவற்றை அனுப்புங்கள். சிறந்தவை வெளியாகும். கோகுலம் சார்பாகவும் அவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பரிசு அளிக்கப்படும். மறக்காமல் பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். முக்கியமான நிபந்தனை, அந்தச் சாதனை, கடந்த ஓராண்டுக்குள் நிகழ்த்தப்பட்டதாக இருக்க வேண்டும். பழையது வேண்டாம்!



அனுப்ப வேண்டிய முகவரி :

கோகுலம்,
சாதனைத் தளிர்கள்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.



சிறந்த மாணவர்!

கீழக்கரை, பேர்ல் மாண்டிசோரி பள்ளியில் முதலாம் வகுப்பு படிப்பவர் எம்.எஸ்.அஹ்மத் ஃபைசல். ஓவியம் மற்றும் மேடைப் போட்டிகளில் அசத்தும் குட்டி சாதனையாளர். 2006 ஆம் ஆண்டில் பள்ளியின் சிறந்த மாணவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இராமநாதபுரம் மாவட்ட அளவில் நடைபெற்ற 'ஃபேஷன்' போட்டியிலும் பங்கேற்று முதல் பரிசு பெற்றுள்ளார். அஹ்மத் ஃபைசல் தொடர்ந்து அசத்த கைகுலுக்குவோம்!





சாதனைத் தளிர்கள்







சென்னை, ராயப்பேட்டை ஆதர்ஷ் வித்யாலயாவில் பன்னிரண்டாம் வகுப்பு படிப்பவர் எஸ்.சௌம்யா. எல்.கே.ஜி. படிக்கும் காலத்திலிருந்தே பாட்டு, பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் கலந்துகொண்டு அறுபதுக்கும்

ஆல் ரவுண்டர்!


2007
ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்
BE PROUD
BE PROUD

மேற்பட்ட பரிசுகளைப் பெற்றவர். 2006ஆம் ஆண்டு யுவகலா பாரதி விருதும் பெற்றுள்ளார். சமீபத்தில், மாநில அளவிலான கட்டுரைப் போட்டியில் பங்கேற்று சான்றிதழ் பெற்றார்.

ஆல் ரவுண்டர் சௌம்யா மேலும் பல ரவுண்டுகள் வர, வாழ்த்துவோம்!

விளையாட்டு ராணி!






REPUBLIC DAY
SPORTS AND GAMES
2006-2007
CERTIFICATE
HOSUR EDUCATIONAL DISTRICT

ஓசூர், மகரிஷி வித்யா மந்திர் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படிப்பவர் மகேஷ்வரி. சிறு வயது முதலே விளையாட்டுகளில் மிகுந்த ஆர்வம். நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், தொடர் ஓட்டம் என பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுள்ளார். மாவட்ட அளவில் பரிசுகளும் பெற்றுள்ளார். இவரது ஆசிரியர்களும் பெற்றோரும் பல வழிகளில் ஊக்கப்படுத்துகிறார்களாம். நாமும் உற்சாகமாய் கரவொலி எழுப்புவோம்!



தவளையும் எலியும்!

ப.இனியன்

தண்ணீரில் குதிக்கும் தவளையும்
தரையில் ஓடும் சுண்டெலியும்
நட்பு கொண்டே சேர்ந்தன
நாளும் சந்தித்தே மகிழ்ந்தன.

நீரில் வாழும் தவளையை
நிலத்தில் வந்து விளையாட
ஜோராய் எலியும் அழைத்தது
ஷோக்காய் தவளை வந்தது.

காடு மேடு திரிந்தன
காலில் வலியும் எடுத்தது
ஓடி அலைந்த தவளையின்
உடம்பு சோர்ந்து போனது.

குளத்து நீரில் விளையாட
குஷியாய் தவளை அழைத்தது
எலியோ ''நீச்சல் தெரியாதே,
எப்படி வருவேன்?'' என்றது.

''கயிறு ஒன்றின் முனையிலே
காலைக் கட்டிக் கொள்வாயே
கயிற்றின் மற்ற முனையிலென்
காலைக் கட்டிக் கொள்கிறேன்.''

என்று தவளை சொன்னது
எலியும் ஒத்துக் கொண்டது
இரண்டும் குளத்தில் குதித்தன
இங்கும் அங்கும் சென்றன

நீந்தத் தெரிந்த தவளையோ
நீந்தி நீர்மேல் வந்தது
ஆனால் பாவம் சுண்டெலி
அந்தோ நீரில் மூழ்கியது

தகுதி யில்லா செய்கையால்
தவறான முடிவு நேருமாம்
அறிவைக் கொண்டு சிந்தித்தால்
அழகாய் உலகில் வாழலாம்!

குட்டீஸ் கோகுலம்

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

இரண்டு படங்களுக்கிடையே எத்தனை வித்தியாசங்கள் உள்ளனவென்று கண்டு பிடியுங்கள்!





விடைகள்


1. புத்தகம், 2.மலை, 3. குடிசையின் கதவு, 4. சிறுமியின் சட்டை நிறம், 5. கரடியின் விரல் நகம்.

2008

புராணக் கதை

பூனையும் அன்னையும்!

வி.ஜெயலட்சுமி



முன்னொரு காலத்தில் விநாயகப் பெருமானின் அன்னையாகிய பார்வதிதேவி சமைத்துக் கொண்டிருந்தாள். கணேசனுக்குப் பிடித்த அப்பம். ''அம்மா எனக்கு விளையாட வேண்டும். தம்பி முருகன் எங்கோ போய்விட்டான். நீங்களாவது வாருங்கள், பந்து விளையாடலாம்'' என்றான் விநாயகன்.

தேவிக்குச் சமையலை முடிக்கும் பரபரப்பு. ''கணேசா... அப்பம் செய்து கொண்டிருக்கிறேனல்லவா? நீ போய் தோட்டத்தில் விளையாடு. சமத்தல்லவா?'' என்று அன்னை 'தாஜா' செய்ததும், 'குடு குடு'வென்று தோட்டத்துக்கு ஓடினான் கணேசன்.

அங்கு ஒரு பூனை குறுக்கும் நெடுக்கும் ஓடிக்கொண்டிருந்தது. பாலகன் கணபதிக்கு அதைச் சீண்ட ஆசை பிறந்தது. ஓடிப்போய்

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் 'கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்பு கிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

அதைத் தூக்கி வந்து ஓர் இடத்தில் அமர்ந்தான்.

''பூனையே! எங்கே இந்தக் கோலைத் தாண்டு பார்க்கலாம்'' என்று ஒரு கோலை உயரப் பிடித்து, அதைத் தாண்டச் சொன்னான்.

பூனையும் வேறு வழியில்லாமல் தாண்டிவிட்டு ஓடியது. ஆனைமுகனுக்கு பூனை விளையாட்டில் ஆர்வம் கூடியது. அதன் பின்னாலேயே போய் காதைப் பிடித்துத் திருகுவதும் வாலை முறுக்குவதும் குச்சியால் அடிப்பதுமாக துன்புறுத்த ஆரம்பித்தான்.

பூனை அழாத குறைதான்! சமயம் பார்த்து கணேசன் கையிலிருந்து நழுவி, உடம்பில் சிராய்ப்பு போன்ற சிறு காயங்களுடன் 'தப்பித்தோம், பிழைத்தோம்' என்று தொலைதூரத்துக்கு ஓடி, மரம் ஒன்றில் ஏறிக்கொண்டது. பெரிய தொந்தியைத் தூக்கிக்கொண்டு பூனை பின்னால் ஓட கணேசனால் முடியவில்லை. அப்படியே அமர்ந்து விட்டான். பசி வேறு வயிற்றைக் கிள்ளியது.

சிறிது நேரம் கழித்து ''அம்மா... உணவு தாருங்கள்'' என அம்மாவிடம் சென்றான். அம்மா எதுவும் பேசவில்லை. பதிலுக்குக் கையைக் காட்டினாள். கையெல்லாம் சிராய்ப்பு! உள்ளங்கை சிவந்து இருந்தது

''அம்மா என்ன ஆயிற்று? இப்படிக் காயமாகி இருக்கிறதே,'' என்று பதறினான் கணேசன்.

''கணேசா! எல்லாம் நீ செய்த வேலைதான்,'' என்றாள் தாய் கவலையுடன்.

''நானா...? நான்தான் தோட்டத்துக்கு விளையாடப் போய்விட்டேனே'' என்று ஒன்றும் புரியாமல் கேட்டான்.

''கணேசா... தோட்டத்தில் நீ பூனையைத் துன்புறுத்தியதை மறந்து விட்டாயா? உனக்கு அது விளையாட்டாக இருந்திருக்கிறது. ஆனால், உன்னிடம் அகப்பட்ட பூனை எவ்வளவு துன்பப்பட்டிருக்கும்? நீ யாரை இம்சித்தாலும் அடி எனக்குத்தான் விழும். நான் உலகை ரட்சிப்பவள் அல்லவா? வாயில்லா எனது பிரஜைகளின் துன்பங்களை நான் தாங்கிக்கொள்வதுதானே நியாயம்? மகனே... இப்போது உனது தவறு புரிந்துவிட்டதா? வா, அந்த எண்ணெயை எடுத்து வந்து கைகளுக்குப் போடு. ஆறிவிடும்'' என்றாள்.



அம்மாவின் வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திலேயே கணேசன் கூனிக் குறுகினான். மன்னிப்புக் கேட்டு பார்வதி தேவியை இறுக அணைத்துக் கொண்டான்.

தாய்க்கு மருந்திட்டான். பிறகு தோட்டத்துக்குச் சென்று பார்த்தான். ஆச்சர்யம்! அங்கே அந்தப் பூனையின் காயங்களும் ஆறியிருந்தன. கணேசன் மிகவும் சந்தோஷமடைந்து பூனையை தடவிக் கொடுத்தான்.

ஹலோ குட்டீஸ்!



நீங்கள் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகி விட்டீர்களா? உங்களுக்காகவே **'உறுப்பினர் பக்கம்'** என்ற பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஓவியம், கதை, கவிதை, ஜோக், அறிவியல் செய்திகள் எதுவாக இருந்தாலும் அனுப்புங்கள். உங்கள் பெயர், முகவரியுடன் மறக்காமல் உறுப்பினர் எண்ணையும் குறிப்பிடுங்கள். தகுதியானவை பிரசுரிக்கப்படும். பரிசு உண்டு! அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம்
(உறுப்பினர் பக்கம்),
47- NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32.

கருத்தைக்



பொழுதுபோக்குகள் பல வகை உள்ளன. அவற்றுள், தபால்தலை சேகரித்தல் ஒருவகை.

தபால்தலைகள், ஒரு தேசத்தின் சாளரங்களாக விளங்குகின்றன; அவற்றின் வழியாக, இயற்கை, பாரம்பரியத்தைக் காணலாம். வரலாறு, கலாசாரம், பண்பாடு, கலைகள், தேசிய விலங்கு, தாவர வகை, பிரபலங்கள், அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களின் பல்வேறு நிலைகள் உள்பட தேசத்தின் ஒவ்வொரு வாழ்க்கை நிலையையும் நாம் அறிந்து கொள்ளலாம்..



மக்கள், தபால்தலைகளின் மதிப்புக்காக மட்டும் சேகரிப்பதில்லை. அவற்றின் வடிவங்களுக்காகவும் அவை நினைவுபடுத்தும் வரலாற்று நிகழ்வுகள் போன்ற பிற தகவல்களுக்காகவும் சேகரிக்கிறார்கள். தபால்தலைகள் சேகரித்தலை ஆங்கிலத்தில் 'ஃபிலேடிலி' (Philately) என்பர்.



பொதுமக்கள் மத்தியில் தபால் தலை சேகரிப்பு பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவதற்கு, பல தேசிய, சர்வதேச கண்காட்சிகள் நடத்தப்பட்டிருக்கின்றன. இதுவரை, இந்திய தபால்துறை, ஒன்பது தேசிய தபால் தலை சேகரிக்கும் கண்காட்சிகளை நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தியுள்ளது. தற்போது, பத்தாவது இந்திய தேசிய தபால்தலை சேகரிக்கும் கண்காட்சி (Tenth India National Philatelic Exhibition - INPEX 2008), ஜனவரி இரண்டு முதல் ஆறாம் தேதி வரை, **சென்னையில் ராணி மெய்யம்மை மற்றும் ராஜா முத்தையா** மன்றங்களில் நடக்கிறது.

கண்காட்சியின் குறிக்கோள்:


✶ பொதுமக்கள், குறிப்பாக இளைஞர்களுக்கு தபால்தலை சேகரித்தலின் கல்வி, கலாசார மதிப்புகளையும், பொழுதுபோக்காக அது பெற்றிருக்கும் வளர்ச்சியையும் எடுத்துரைத்தல்.

✶ தபால்தலை சேகரித்தலின் ஒவ்வொரு நிலையையும் மேம்படுத்துதல்.

✶ இந்திய தபால்துறை, தபால்தலை சேகரிப்போர், தபால் தலை சேகரிக்கும்



மித்ரா



கட்டுரை




களை காட்சிப்படுத்த ஒரு நல்ல வாய்ப்பை அளிக்கும்.

✶ தேசிய தபால் தலை அருங்காட்சியகம், இந்திய பாதுகாப்பு அச்சகம், ராணுவ தபால் சேவை மற்றும் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களிலிருந்து கிடைத்தற்கரிய தபால் தலைகள், பார்வையாளர்களின் கண்களுக்கு விருந்தாக வைக்கப்படும்.

✶ தபால்துறை வரலாறு, தபால் தலை சேகரித்தல் பற்றிய கட்டுரைகள் கொண்ட வண்ணமயமான

கவரும் கண்காட்சி!



வியாபாரிகள் மற்றும் தபால் தலை சேகரிக்கும் ஊடக மக்களுக்குள் இணக்கமான நட்புறவை பரவலாக்க உதவுதல்.

✶ தபால்தலை சேகரிக்கும் போட்டிகளில் பங்கு பெற ஆர்வத்தைத் தூண்டுதல்.

இன்பெக்ஸ் 2008

✶ இது தமிழ்நாட்டில் முதன்முறையாக நடைபெறவிருக்கிறது.

✶ கண்காட்சியில் ஆயிரம் சட்டங்கள் (frame) பார்வைக்கு வைக்கப்படும். இது, தபால்தலை சேகரிப்போர், தமது தலை சிறந்த தபால்தலை சேகரிப்பு



ஞாபகார்த்த இதழ், இத்துறை சார்ந்த புகழ்பெற்ற நிபுணர்களால் வெளியிடப்படும்.



✶ கண்காட்சியின் ஒவ்வொரு நாளும், பல்வேறு தலைப்புகளில் சிறப்பு தபால் உறைகள் வெளியிடப்படும்.

✶ நாட்டின் அனைத்து பகுதிகளிலிருந்து வரும் தபால்தலை வியாபாரிகள், அவர்களுக்கான கடைகளை, கண்காட்சி நடக்கும் இடத்தில் அமைப்பர்.

வாய்ப்பு கிடைத்தால்
இந்தக் கண்காட்சிக்கு
ஒரு விஸிட் அடியுங்கள்!




கு.நித்யானந்தன்,
10-ஆம் வகுப்பு,
பிஷப் ஹீபர்
மேல்நிலைப்
பள்ளி,
தெப்பக்குளம்





எஸ்.நிவாஷினி ராஜலட்சுமி,
3-ஆம் வகுப்பு
கேந்திர வித்யாலயா
சென்னை



ஏ. அனிதா,
7-ஆம் வகுப்பு
கஸ்தூரிபா காந்தி பாலிகா
வித்யாலயா பள்ளி,
சின்னமனூர்.




ச. ஸ்ரீபாரதி,
10-ஆம் வகுப்பு
காமராஜ் மேல்நிலைப்
பள்ளி, நம்பியூர்.

உங்கள் கைவண்ணம்!

2008

கோ.பிரவீண் குமார், 6-ஆம் வகுப்பு
ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி
வித்யாலயா பள்ளி,
விழுப்புரம்.





வி.திலக் ராஜ்குமார்,
9-ஆம் வகுப்பு
ஸ்ரீசாரதா பால மந்திர்
ஆண்கள் மெட்ரிக் பள்ளி,
சேலம்.



“கண்ணா! கண்ணா! மணி ஒன்பது ஆகுது. இன்னுமா நீ பள்ளிக்கூடத்துக்குக் கிளம்பலை? என்ன எழுதிட்டு இருக்கே?” என்ற அப்பாவை தலை நிமிர்ந்து பார்க்கக்கூட நேரம் இல்லாமல் மடமடவென எழுதிக் கொண்டே பதில் சொன்னான் கண்ணன்.

“அப்பா இது...




அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசு ரூ.250/- பெறும் கதை-2

பரிசுக் கதை

வீட்டுப் பாடம் இல்ல. ஒரு கட்டுரைப் போட்டி. 'மனித நேயம்' அப்படிங்கற தலைப்புல ஒரு கட்டுரை எழுதணும். எனக்குத் தெரிஞ்சதை நான் எழுதியிருக்கேன். நீங்க கொஞ்சம் சொல்லுங்கப்பா, மிச்சத்தையும் எழுதிட றேன்'' என்று ஆவலுடன் தந்தையைப் பார்த்தான்.

''சரி எழுது! அதாவது, எல்லா மனிதர்களிடமும் மிகுந்த அன்புடன் நடந்துகொள்வதே மனிதநேயம்! உயர்வு-தாழ்வு, ஏழை-பணக்காரன் என்று எந்த பேதமும் பார்க்காமல், அனைவரையும் ஒரு சகோதர மனப்பான்மையுடன் நடத்துவதே மனித நேயத்தின் முக்கிய அம்சமாகும். உதவி என்று யாராவது தேடி வந்தால், அவரை அலட்சியம் செய்யாமல் உடனடி யாக நம்மால் முடிந்த உதவியைச் செய்யவேண்டும்.

மனித நேயம்!



காற்றைப்போல, தண்ணீரைப் போல, உயிரைப் போல மனிதனுக்கு மிக மிக அவசியமானது மனித நேயம்'' என்றார்.

கண்ணனின் மனத்தில் என்ன தோன்றியது தெரி யுமா? 'எவ்வளவு அருமையான அப்பா இவர்! நமக்கு மணி மணியான கருத்துகளை நொடிப்பொழுதில் எடுத்துச் சொல்கிறார்' என்று மகிழ்ந்தான்.

அன்று இரவு பயங்கரமான இடி, மின்னலுடன் பலமான காற்று வீசி மழை பொழிந்தது. தென்னை மரங்கள் எல்லாம் சாய்ந்துவிடும் அளவுக்கு ஆடியதை கண்ணன் இதுவரை பார்த்ததேயில்லை. மாடி அறை யில் இருந்து ஜன்னல் வழியாகப் பார்த்த கண்ண னுக்கு, வெகுதூரத்தில் கொட்டும் மழையில் சிலர் ஓடி வருவது தெரிந்தது. 'யார் அவர்கள்? அட! அருகே வந்தவர்கள் தன் வீட்டு வாசலில் நின்றுவிட்டார்களே!

ரா.ரம்யா

அவர்கள் யார், எதற்காக இங்கே வந்திருக்கிறார்கள்?'' என்று தெரிந்து கொள்ள கண்ணன் வேகமாகக் கீழே ஓடினான். வாசல் கதவைத் திறந்தான்.

ஒரு முதியவர், ஒரு கணவன், மனைவி, இரண்டு சிறுவர்கள் என ஒரு சிறு கூட்டமே கூடியிருந்தது. இன்னும் சிலர் அடுத்த வீட்டிலும் எதிர் வீட்டிலும் நுழைந்துகொண்டிருந்தார்கள். அந்த முதியவர், ''தம்பி, எங்க வீட்டுப் பக்கம் வெள்ளம் வந்து தண்ணி குடிசைக் குள்ளே எல்லாம் வந்துருச்சு. இன்னிக்கு ராத்திரி மட்டும் இந்த வாசலில் தங்கிட்டு நாளைக்குப் போயிடறோம்'' என்று வேண்டிக்கொண்டார்.


''யார்கிட்ட பேசற கண்ணா?'' என்ற படி வெளியே வந்த சுந்தரம், ''யார் நீங்க? யாரைக் கேட்டு உள்ள வந்தீங்க? முதல்ல வெளிய போங்க. இது என்ன சத்திரமா?'' என்று விரட்டினார்.

''அப்பா, பாவம்பா'' எனக் கெஞ்சிய மகனிடம், '''உனக்கு ஒண்ணும் தெரியாது, அவங்க இந்த இடத்தை நாசம் பண்ணுவாங்க, அப்புறம் எதையாவது திருடிட்டுப் போவாங்க, அதான்'' என்று கோபத்துடன் உள்ளே போனார்.

கண்ணன் வாடிய முகத்துடன் மிகுந்த குழப்பத்துடன் மாடிக்குப் போய், படுக்கையில் சாய்ந்தான். நாட்கள் நகர்ந்தன. அப்பாவுடன் மீண்டும் கலகலப்பாகப் பழகினாலும், அந்தப் பழைய சம்பவம் மட்டும் ஒரு ஆறாத புண்ணாக ஒரு வடுவாக அவன் மனத்தில் பதிந்துப் போனது.

ஒரு மாதம் கழித்து, ஒருநாள் இரவு, சுந்தரத்துக்கு லேசாக தலை சுற்றுவது போல இருந்தது. மனைவியும் மகனும் தொலைக்காட்சியில் மூழ்கியிருந்தார்கள். சுற்றும் முற்றும் பார்த்த சுந்தரம், திடீரென, தன் அருகில் இருந்த ஒரு பூ ஜாடி யாரும் தொடாமலே 'தடார்' எனக் கீழே விழுந்ததைப் பார்த்து மேலும் வியப்படைந்தார். அந்த நொடியில்தான் 'தன் உடம்புக்கு எதுவுமில்லை, ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது' என்பதை உணர்ந்தார். வெளியே வந்தவர், தன் வீட்டு வாசல் கூரையின் ஒரு சிறு பகுதி கீழே விழுந்து நொறுங்கியதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

அதே சமயத்தில், பலர் தங்கள் வீடுகளில் இருந்து கலவரத்துடனும் குழப்பத்துடனும் வெளியே ஓடி வந்து, ஒருவரை ஒருவர் விசாரித்தார்கள். ஆம்! சுந்தரம் சந்தேகப்பட்டது சரிதான்! அது லேசான நில நடுக்கம். இனி மீண்டும் வீட்டுக்குள் போக யாருக்காவது துணிச்சல் வருமா? கண்ணனும் சுந்தரமும் அப்படியே உலாவிக்கொண்டு அடுத்த தெரு வரை சென்றார்கள். வானில் பிறைநிலா முடிந்தவரை ஒளி வீசியது. வெகுநேரம் அங்குமிங்கும் உலாவியதால் சுந்தரத்துக்கு திடீரென படபடப்பு ஏற்பட்டு, அப்படியே தள்ளாடி, கீழே சாய்ந்தார்.



பாவம் கண்ணன்! ''ஐயோ, யாராவது வாங்களேன்'' என்ற குரல் கொடுத்தான். அருகில் இருந்த குடிசையில் இருந்து ஒரு சிறுவனும் அவன் தந்தையும் அவரைத் தங்கள் குடிசைக்குள் அழைத்துச் சென்றார்கள்.

சிறுவன் ராமு தண்ணீர் கொண்டு வந்தான். விசிறி கொண்டு விசிறினான். அந்தக் குடிசையில் அவ்வளவு வெளிச்சம் இல்லை. ராமுவின் தந்தை ஒரு விளக்கைக் கொண்டு வந்து அருகில் வைத்தபோது, சுந்தரம் மெல்லக் கண் விழித்தார். மங்கலான வெளிச்சத்தில் தன்னைச் சுற்றி இருந்தவர்களைப் பார்த்ததும் அதிர்ச்சியும் அவமானமும் அடைந்தார். ஆம்! அன்று 'இடமில்லை, போ வெளியே' என்று இவரால் மழையில் துரத்தப்பட்ட அதே குடும்பம்தான். சுந்தரம் அவர்களை நோக்கி கண்டு கைகூப்பி நன்றியைத் தெரிவித்தார்.

மறுநாள் மாலை கண்ணன் பள்ளியில் இருந்து ஒரு தங்கப்பதக்கத்துடன் ஓடிவந்து, ''அப்பா, அப்பா, எனக்கு 'மனித நேயம்' கட்டுரையில் முதல் பரிசு கிடைச்சிருக்கு. எல்லாம் நீங்க சொன்ன கருத்துகளால்தான்'' என்று துள்ளிக் குதித்தான்.

ஒருகணம் சிந்தித்த சுந்தரம் ''கண்ணா, நான் மனித நேயத்தைப் பற்றி வெறும் வார்த்தைகளால்தான் சொன்னேன். நேற்று எனக்கு உதவிய அந்த ராமுவும் அவன் குடும்பமும் அதை செயலிலே காட்டினார்கள். வா, அவர்களைச் சந்தித்து உன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்'' என்றார் அப்பா.

இருவரும் அந்த குடிசையை அடைந்தனர். அப்பா அந்த தங்கப் பதக்கத்தை ராமுவின் கழுத்தில் அணிவிக்க, கண்ணன் கைகளைத் தட்டினான். ●



விடையைச் சொல்; பரிசை வெல்-5ல் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானோர் சரியான விடைகளை எழுதியிருந்தார்கள். அவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, தலா ரூ.100/- வீதம் பரிசு பெறும் பத்து குட்டீஸ்களின் பெயர்களும், சரியான விடைகளும் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன.

சரியான விடைகள் :

1. கோவிந்தன்
2. நவம்பர் 20
3. ஹரிணி
4. கண்தானம்
5. 1999

பரிசு பெறுவோர் :

1. பி.கே.ஸ்யாம் - கும்பகோணம்
2. எம்.மஞ்சு - மாங்குழி
3. த.ஆகாஷ்மாரி - கடையநல்லூர்
4. எம்.கீதா - திருநெல்வேலி
5. அ.க.சாய் ஈஷ்வர் - திருச்சி
6. க.ஜெயராம் - திண்டிவனம்
7. த.பிருந்தா - சென்னை
8. சி.விஜயபிரசன்னா - வேலூர்
9. ர.மீனாதேவி - உடுமலைப்பேட்டை
10. க.ரஞ்சித் - இராணிப்பேட்டை

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்; கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!

ஹலோ குட்டீஸ்!

2008

இந்த மாத மினி கோகுலத்தை வித்தியாசமாய், ஆண்டு முழுவதும் உங்களுக்குப் பயன்தரும் விதமாய் தயாரித்துள்ளோம். வழக்கம்போல் 37ஆம் பக்கத்திலிருந்து 44ஆம் பக்கம் வரை தனியாகப் பிரித்து எடுங்கள். அவற்றை, இரண்டாக மடித்து கத்தரியுங்கள். இப்போது அது பதினாறு துண்டுகளாகிவிடும். அதாவது 37ஆம் பக்கத்தின் கீழ்ப்பகுதி மினி கோகுலத்தின் முதல் பக்கமாகவும் மேல் பகுதி பதினாறாவது பக்கமாகவும் மாறிவிடும். எல்லாவற்றையும் சேர்த்து ஸ்டேப்ளரைக் கொண்டு பின் செய்யுங்கள். கைக்கு அடக்கமான, பதினாறு பக்க 'மினி கோகுலம்' ரெடி!

இதில் உங்கள் பெயர், பிறந்த தேதி, பெற்றோர், நண்பர்கள் பிறந்த தேதிகளைக் குறித்துக்கொள்ளலாம். பிடித்தவர்களிடம் ஆட்டோகிராப் வாங்கிக்கொள்ளலாம். பள்ளி அட்டவணை தரப்பட்டுள்ளது. இது தவிர, இந்த ஆண்டுக்கான மாத காலண்டர் தரப்பட்டுள்ளது. அழகழகான படங்களுடன் மனதைக் கவரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள இந்த 'மினி கோகுலம்' உங்களுக்கு நிச்சயம் பயனளிக்கும். அடுத்தடுத்த மாதங்களிலும் 'மினி கோகுலம்' வித்தியாசமாக வரப் போகிறது. உங்களிடமும் வித்தியாசமான யோசனை இருந்தால் எழுதி அனுப்புங்கள். தேர்ந்தெடுக்கப்பட்டால் பரிசு உண்டு!

அன்புடன்
ஆசிரியர்



16
சூப்பர் டைரி
2008
ஐடியா : ராஜ்
டிசைன்ஸ் : சகா, கோபால்



மினி
கோகுலம்
சூப்பர் டைரி
2008
கோகுலம்
25
என் பெயர் : ....
பிறந்த தேதி : ....
பள்ளி : ....
....
1

★ ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்!

வீட்டு முகவரி



பெயர் ....

முகவரி ....

....

....

பின்கோடு ....

தொலைபேசி ....

★ இடுக்கண் வருங்கால் நகுக!

பிறந்த நாட்கள்



	பெயர்	பிறந்த தேதி
தாத்தா :	....	....
பாட்டி :	....	....
அப்பா :	....	....
அம்மா :	....	....
சகோதரன் :	....	....
சகோதரி :	....	....

★ பிச்சை புகினும் கற்கை நன்றே!



நவம்பர்

ஞாயி	30	2	9	16	23
திங்		3	10	17	24
செவ்		4	11	18	25
புத		5	12	19	26
வியா		6	13	20	27
வெள்		7	14	21	28
சனி	1	8	15	22	29

டிசம்பர்

ஞாயி		7	14	21	28
திங்	1	8	15	22	29
செவ்	2	9	16	23	30
புத	3	10	17	24	31
வியா	4	11	18	25	
வெள்	5	12	19	26	
சனி	6	13	20	27	

★ கூடி வாழ்ந்தால் கோடி நன்மை!

உறவினர்கள்



பெயர்	பிறந்த தேதி
1)	....
2)	....
3)	....
4)	....
5)	....
6)	....



செப்டம்பர்

ஞாயி	திங்	செவ்	புத	வியா	வெள்	சனி
	1	2	3	4	5	6
7	8	9	10	11	12	13
14	15	16	17	18	19	20
21	22	23	24	25	26	27
28	29	30				

அக்டோபர்

ஞாயி	திங்	செவ்	புத	வியா	வெள்	சனி
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

கோகுலம் 25

✸ தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.

✸ காலம் பொன் போன்றது.

கால அட்டவணை

	1	2	3	4
திங்கள்				
செவ்வாய்				
புதன்				
வியாழன்				
வெள்ளி				
சனி				

உணவு இடைவேளை



ஜூலை

ஞாயி		6	13	20	27
திங்		7	14	21	28
செவ்	1	8	15	22	29
புத	2	9	16	23	30
வியா	3	10	17	24	31
வெள்	4	11	18	25	
சனி	5	12	19	26	

ஆகஸ்ட்

ஞாயி	31	3	10	17	24
திங்		4	11	18	25
செவ்		5	12	19	26
புத		6	13	20	27
வியா		7	14	21	28
வெள்	1	8	15	22	29
சனி	2	9	16	23	30

✱ தாயிற் சிறந்த கோயிலுமில்லை.

✱ கடமை கண் போன்றது.

(TIME TABLE)



5	6	7	8

* அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்!



மே

ஞாயி		4	11	18	25
திங்		5	12	19	26
செவ்		6	13	20	27
புத		7	14	21	28
வியா	1	8	15	22	29
வெள்	2	9	16	23	30
சனி	3	10	17	24	31

ஜூன்

ஞாயி	1	8	15	22	29
திங்	2	9	16	23	30
செவ்	3	10	17	24	
புத	4	11	18	25	
வியா	5	12	19	26	
வெள்	6	13	20	27	
சனி	7	14	21	28	

* யாதும் ஊரே: யாவரும் கேளிர்!

நண்பர்கள் பிறந்த நாட்கள்



பெயர்	பிறந்த தேதி
1)	....
2)	....
3)	....
4)	....
5)	....
6)	....





மார்ச்

ஞாயி	30	2	9	16	23
திங்	31	3	10	17	24
செவ்		4	11	18	25
புத		5	12	19	26
வியா		6	13	20	27
வெள்		7	14	21	28
சனி	1	8	15	22	29

ஏப்ரல்

ஞாயி		6	13	20	27
திங்		7	14	21	28
செவ்	1	8	15	22	29
புத	2	9	16	23	30
வியா	3	10	17	24	
வெள்	4	11	18	25	
சனி	5	12	19	26	

✱ இக்கரைக்கு அக்கரை பச்சை!

✱ ஒன்றே குலம்; ஒருவனே தேவன்!

ஆட்டோகிராஃப்

எனக்கு மிகவும் பிடித்தவர்களின் கையொப்பங்கள்



★ கற்றது கையளவு; கல்லாதது கடலளவு!



ஜனவரி

ஞாயி		6	13	20	27
திங்		7	14	21	28
செவ்	1	8	15	22	29
புத	2	9	16	23	30
வியா	3	10	17	24	31
வெள்	4	11	18	25	
சனி	5	12	19	26	

பிப்ரவரி

ஞாயி		3	10	17	24
திங்		4	11	18	25
செவ்		5	12	19	26
புத		6	13	20	27
வியா		7	14	21	28
வெள்	1	8	15	22	29
சனி	2	9	16	23	

★ உப்பிட்டவரை உள்ளவும் நினை!

தொலைபேசி எண்கள்






பெயர்	எண்
1)	....
2)	....
3)	....
4)	....
5)	....
6)	....

2008

வண்ணம் தீட்டுங்கள்!

இந்தப் படத்தை உங்கள் கைவண்ணத்தால் அழகுபடுத்துங்கள்!



பெரிய எழுத்து : குட்டிக் கதை

சுந்தரபுரி காட்டில் மகான் ஒருவர் வாழ்ந்து வந்தார். மிக எளிமையுடன் வாழ்ந்து வந்ததால் அவரை நாட்டு மக்கள் மிகவும் போற்றினர். அவரிடம் பலரும் சீடர்களாக இருந்தனர். அன்பு, அடக்கம், பொறுமை, பணிவு என அனைத்து நல்ல குணங்களும் அவரிடம் குடிகொண்டிருந்தன. எப்போதும் அவரது கண்களில் கருணையும் சொற்களில் இனிமையும் தவழும். பிறருக்குச் சேவை செய்வதிலும் அவருக்கு நிகர் அவரே!

ஒருமுறை, அவர் வன தேவதையை நோக்கித் தவமிருந்தார். ஐம்புலன்களையும் அடக்கி அவர் இயற்றிய உண்மை தவத்தைக் கண்டு மகிழ்ந்த வன தேவதை, உடனடியாக அவருக்குக் காட்சி அளித்தாள். ''மகனே! உன் தூய உள்ளத்தையும் உண்மை தவத்தையும் கண்டு மெச்சினேன். நீ ஆயிரம் ஆண்டுகள் வாழ வரமளிக்கிறேன்'' என்றாள்.

உடனே துறவி, ''தாயே! எனக்கு எண்பது ஆண்டுகளே போதும்! அவ்வாறே வரம் தாருங்கள்'' என்றார். வனதேவதை, ''சரி, அவ்வாறே தந்தேன். உன் சேவையைத் தொடர்ந்து செய்'' என்று கூறி மறைந்தாள்.

நடந்ததை சீடர்களிடம் கூறினார் மகான். சீடர்களுக்கோ அதிர்ச்சி!

• மா.கண்ணன்




ஆண்டுகள்!

2008

''குருவே, தாங்கள் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தால் பல தலைமுறையினருக்கு உங்களால் ஞானமும் சேவையும் கிடைக்குமே! அதை விட்டு, எண்பது ஆண்டுகள் போதுமென்றது ஏன்?'' என்று கேட்டனர்.

குரு புன்னகையுடன் கூறினார். ''மாணவர்களே! முதலில், ஒருவன் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தால் மற்றவர்களிடம் அவனுக்குள்ள மதிப்பு குறையும். இரண்டாவது, நான் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்தால், மற்றவர்களும் ஆயிரம் ஆண்டுகள் வாழ்வது எவ்வாறு என்றுதான் சிந்திப்பார்களே தவிர, விரைவில் ஞானம் அடைய வேண்டும் என்று நினைக்க மாட்டார்கள்'' என்றார். சீடர்களுக்கு குருவின் மீது மேலும் மதிப்பு பெருகியது.●



டியர் சில்ட்ரன்!

பச்சைப்பசேல்ன்னு புல்வெளியைப் பார்த்தா எப்படி இருக்கும்? ஓடியாடணும், ஆட்டம் போடணும்னு நினைப்போமில்லியா? வாங்க, சில புல்வெளிகளுக்குப் போகலாம். புல்வெளிகளில் பல வகைகள் உண்டு. அவைகளை வெப்பமண்டலப் புல்வெளிகள், மித வெப்ப மண்டலப் புல்வெளிகள், நீரால் சூழப்பெற்ற புல்வெளிகள், மலைப்பாங்கான இடப் புல்வெளிகள், துருவப் புல்வெளிகள், பாலைவனப் புல்வெளிகள் என வகைப்படுத்தலாம்.

பிராய்ரிஸ் (மித வெப்ப மண்டல) புல்வெளிகளுக்கு ஆண்டுக்கு 380 முதல் 900 மில்லி மீட்டர் மழை கிடைக்கிறது. மழைக் காடுகளில் வளர்கின்ற புல்வெளிக்கு ஆண்டுக்கு 2000 மில்லி மீட்டருக்கு மேல் மழை கிடைக்கும். பிராய்ரிஸ் புல்வெளிகளின் பொதுவான வெப்பநிலை 20 முதல் 30 டிகிரி செல்சியஸ்!

கடந்த இருநூறு ஆண்டுகளாக இந்தப் புல்வெளியின் பரப்பளவு குறைந்து கொண்டே வருகின்றன. இங்கே வளர்கின்ற புல் வகைகளைப் பார்க்கலாம். பெரிய நீலத் தண்டுப் புல், நீல கிராமாப் புல், எருமைப் புல், ஃபிளீபேன், இந்தியப் புல், பர்பிள் கோன் பூ, பூனைக் காஞ்சான். உயரமாக வளரக் கூடியது பெரிய நீலத் தண்டுப் புல் வகை. மூன்று முதல் பத்து அடிகள் வரை உயரமாக வளரும்.



* அமெரிக்கன் பைசன்



* பேட்ஜர்

பிராய்ரிஸ் புல்வெளிகளில் எழுபத்தைந்து சதவிகிதம் வளர்கின்ற புல் நீல

முனைவர் ஆசுரா

போவோம் வா, புல்வெளிக்கு!

கிராமாப் புல் வகைதான். இது பதினைந்து முதல் முப்பது சென்டிமீட்டர் வரை வளரும். இந்தப் புல் கொத்தாக வளரும் தன்மை கொண்டது. ஜூன் முதல் ஆகஸ்ட் மாதம் வரை பூப்பூக்கும். ஐம்பது ஆண்டுகள்வரை நிலைத்து நின்று வளரக்கூடியது.

அடுத்ததாக எருமைப்புல்! இது குட்டைப்புல் வகையைச் சார்ந்தது. இதன் உயரம் ஐந்து முதல் பதிமூன்று சென்டி மீட்டர். இது ஆறடி முதல் பன்னிரண்டு அடி வரை தன் எல்லையைப் பரப்பிக் கொண்டு வளரும். எருமைகளுக்கு முக்கிய உணவாகப் பயன்படுகிறது.





பிராய்ரி நாய்



கோயோட்

பிராய்ரிஸ் புல்வெளிகளில் பூத்துக் குலுங்கும் செடி எது தெரியுமா? 'பிளீபேன்'! இதனுடைய பூக்கள் டெய்சி பூக்களைப் போல இருக்கும். நூறு மெல்லிதழ்களைக் கொண்ட பூக்களாய் வெள்ளை மற்றும் பிங்க் நிறத்தில் இருக்கும். வெள்ளை வால் மான்கள் இவற்றை விரும்பிச் சாப்பிடும்.

அடுத்ததாக நாம் பார்க்கப் போறது

நாம் சாதாரணமாக நினைக்கும் புற்களில் இத்தனை வகைகளும் பல பயன்களும் இருப்பது ஆச்சர்யம்!









* புல் வகைகள்...

'பர்பிள் கோன்' பூச்செடி! கண்ணைப் பறிக்கும் வண்ணப் பூக்களைக் கொண்டது. சிவப்பு அல்லது வெள்ளை இதழ்களோடு இவை மலரும். பிராய்ரிஸ் அருகில் வசிக்கும் மக்கள், பூச்சிக்கடி, பாம்புக்கடி போன்றவற்றுக்கு இந்தச் செடியின் சாற்றைப் பயன்படுத்தினர். அது மட்டுமில்லாமல் அறிவியலாளர்கள் இதற்கு பாக்டீரியாவை எதிர்க்கும் வல்லமை இருப்பதாகவும் கண்டறிந்துள்ளனர். காய்ச்சல், பல்வலி போன்றவற்றுக்கும் இந்தச் செடி பயன்படுகிறது.

'இரத்தப் பூச்செடி' என்றொரு புல். இதற்குப் 'பால் புற்கள்' என்ற பெயரும் உண்டு. சிவப்பு மற்றும் மஞ்சள் நிறத்தில் பூக்கும். இந்தப் பூக்களுக்கு, தேனீ, பாடும் பறவை, மோனார்க் வண்ணத்துப் பூச்சிகள் ரசிகர்கள். இந்தப் புல்வெளிகளில் பார்த்துதான் நடந்து போகணும். ஏனென்றால் 'ஸ்டிங்கிங் நெட்டில்' எனப்படும் 'பூனைக் காஞ்சான்' செடிகளும் உள்ளன. உடம்பில் பட்டால் அரிக்கும்.

'இந்தியப் புல்' எனப்படுபவை இங்கேதான் வளருது. இந்தியப் புல்னு இதற்குப் பேரு இருந்தாலும், சொந்த ஊரு அமெரிக்காதான்! பிராய்ரி புல்வெளிகளில் காணப்படும் 'பேட்ஜர்' நீளமான மூக்கோடு பார்க்கப் பெருச்சாளி மாதிரி இருப்பார். 'பாப் பூனை', ஒரு வகையான காட்டுப் பூனை. இதனுடைய உரோமத்துக்காக ஆண்டுக்கு 80,000 பூனைகள் கொல்லப்படுகின்றதாம். 'கோயோட்' பார்க்க நரி மாதிரி தெரிகிற நாய் இனம். இன்னும், ஸ்விப்ட் நரி, வெள்ளை வால் மான், அமெரிக்கன் பைசன், பால்டு கழுகு போன்றவைகள் உள்ளன.

இங்கே உள்ள லோக்கல் ஹீரோ யார் தெரியுமா? அவர்தான் 'பிராய்ரி நாய்'. பிராய்ரி நாய் பார்ப்பதற்கு அணில் போன்ற தோற்றம் கொண்டது. ரொம்ப சுறுசுறுப்பு. குட்டிக் குட்டிக் கால்கள், உடம்பில் பிரௌன் நிற உரோமம் இருக்கும். இது பூமிக்கு அடியில் குழிகள் தோண்டி வசிக்கும். ஒரு காலத்தில், 25,000 சதுர மைல் பரப்பளவில் 400 மில்லியன் பிராய்ரி நாய்கள் இருந்தனவாம்.



தேடி வரும் கோகுலம்



படிக்க படிக்க குதூகலம்!

பெயர் : ....

முகவரி : ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ்,

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,

சென்னை - 600 032

அவர் ஒரு கார் மெக்கானிக். பல ஆண்டுகளாக கார் பழுது பார்க்கும் தொழில் செய்து வருகிறார். மெக்கானிக் வேலை அவருக்கு மிகவும் அத்துப்படி.

அவர் ஒரு ஃபோர்டு கார் வைத்திருந்தார். ஒருநாள் காரை எடுத்துக் கொண்டு உல்லாசமாக காட்டுப் பகுதிக்குச் சென்றார். காட்டுக்குள் பொழுதைக் கழித்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தார். நடுக்காட்டில் கார் நின்றுவிட்டது. பழுது பார்த்து ஓட்ட ஆரம்பித்தார். வண்டி பத்தடி போனதும் நின்றுவிடும். இப்படியே பலமுறை நடந்தது. அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஊரோ வெகு தொலைவில் இருந்தது. செய்வதறியாது தலையில் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டார் மெக்கானிக்.

சிறிது நேரத்தில் அவ்வழியே ஒரு கார் வந்தது. நடுக்காட்டில் இந்த மெக்கானிக்கைப் பார்த்த அந்தக் காரோட்டி, காரை நிறுத்தி கீழே இறங்கினார். வயது முதிர்ந்த அந்தப் பெரியவர் பழுதான கார் அருகே வந்தார்.

அவர் மெக்கானிக்கிடம், ''வண்டியில் என்ன கோளாறு?'' என்று கேட்டார்.

மெக்கானிக் விவரத்தைச் சொன்னார். வந்தவர், ''நான் வண்டியை சரி

நடுக்காட்டில்...

பி.எஸ்.ஜேம்ஸ்



பார்க்கட்டுமா?'' என்று கேட்டார். மெக்கானிக் சிரித்து விட்டார்.

''அய்யா, இரண்டு மணி நேரம் நானும் எவ்வளவோ முயன்றுவிட்டேன். இந்த வண்டியைப் பொறுத்த வரையில் நான் கைதேர்ந்த மெக்கானிக். எனக்கே அது என்ன பழுது என்று கண்டுபிடிக்க முடியவில்லை'' என்றார்.

''இருந்தாலும் நான் என்னவென்று கவனிக்கிறேனே'' என்றார் பெரியவர்.

மெக்கானிக் ''சரி'' என்றார். வந்தவர் இஞ்சினுக்குள் கையை விட்டு லேசாக ஏதோ ஒன்றை சரி செய்தார்.

''இப்போது வண்டியை ஓட்டுங்கள்'' என்றார்.

நடந்த கதை

2008

மெக்கானிக் வண்டியை 'ஸ்டார்ட்' செய்தார். வண்டி ஓட ஆரம்பித்தது.

மெக்கானிக்குக்கு நடுக்காட்டுக்குள் தெய்வம் மாதிரி வந்த அந்தப் பெரியவரைப் பார்த்து மெய்சிலிர்க்க ஆரம்பித்துவிட்டது.

''அய்யா, தங்களை நான் குறைத்து மதிப்பிட்டு விட்டேன். மன்னிக்கவும்! கார் மெக்கானிக்காக பலகாலம் பணியாற்றிக் கொண்டிருக்கிறேன். ஆனாலும், வண்டியிலுள்ள பழுதை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. தாங்கள் வந்து கை வைத்தவுடன் கார் ஓட ஆரம்பித்து விட்டது. தாங்கள் யார்? நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று கேட்டார் மெக்கானிக்.



பெரியவர், ''நான்தான் ஹென்றி ஃபோர்டு. இந்தக் காரைத் தயாரித்தவன். எனக்கு இந்த கார் சம்மந்தமாக எல்லா விஷயமும் தெரியும். ஏனென்றால் இந்த வண்டியிலுள்ள ஒவ்வொரு பாகமும் என் இரத்த நாளங்கள் போல'' என்றார்.

குழந்தைகளே! இது போலதான் நீங்களும். உங்களைப் பற்றி பெற்றோருக்கு எல்லா விவரங்களும் தெரியும். எனவே, அவர்கள் எது சொன்னாலும் நல்லவைகளாகத்தான் இருக்கும்!



கவிதைப்

நாய்க்குட்டி!

பி.எஸ்.ஜேம்ஸ்

எங்கள் வீட்டு நாய்க்குட்டி
தங்க நிறத்து நாய்க்குட்டி
மெல்ல வந்தே வாலாட்டி
செல்லம் காட்டும் நாய்க்குட்டி!

கள்ள மில்லா நாய்க்குட்டி
உள்ளம் அள்ளும் நாய்க்குட்டி
அன்னை தரும் உணவுக்கு
கிண்ணம் சுமக்கும் நாய்க்குட்டி!

தம்பி அழைத்தால் தாவிவரும்
தங்கை சொன்னால் ஓடிவரும்
எங்கள் வீட்டு நாய்க்குட்டி
தங்க நிறத்து நாய்க்குட்டி!

காமராஜர் தெரியுமா? - அந்தக்
கருணை முகம் மறக்குமா?
ஈடில்லாத தலைவராம்
இவரைப் போல எவருண்டு!

விருதுநகர் பிறந்தவர் - அவர்
விஞ்சும் எளிமை மிக்கவர்
வீறு கொண்டு சுதந்திர
வேள்வி தன்னில் குதித்தவர்!

பள்ளி இல்லா ஊர்களில் - பிறர்
படிக்கப் பள்ளி திறந்தவர்
படித்திடாத மேதையாம்
உருவில் கறுப்பு காந்தியாம்!





காமராஜர்

கு.காளிமுத்து

இறுதிவரை உழைத்தவர் - நம்
இதயங்களில் நிறைந்தவர்
உறுதியோடு நாமுமே
அவரைப் போல வாழுவோம்!



ஒற்றுமை!

ஒற்றை மரமும் தோப்பில்லை - நல்
உறவு இலையேல் காப்பில்லை
சற்றே நாமும் சிந்தித்தால்
சார்ந்த பலமே முந்திவரும்!


மழையின் துளிகள் ஆறாக - நம்
மண்ணின் வளமை சீராகும்!
உழைப்புடன் ஒற்றுமை இணைந்தாலே
வறுமை இருளும் அகன்றுவிடும்

எறும்பின் மாறா உழைப்பினையே
இதயம் தன்னில் நினைப்பாயே!
கரும்பாய் வாழ்வும் தித்திக்கும்
கனியும் வளமே எத்திக்கும்!

கூட்டாய் உறவு கொண்டுவிடில்
கூடும் பொருளே அண்டிவரும்;
நாட்டின் சிறப்பும் உயர்வாகும்
நாளும் நலமே கூடி வரும்.



தீ.சரோஜா



புள்ளிகளை இணையுங்கள்!

1 முதல் 34 வரையிலான புள்ளிகளை இணைத்தால் இங்கே இருப்பது யாரென்று தெரியும்!

பட்டியல் 2008



கோகுலம் சிறுவர் சங்கம்



251) க.விக்னேஷ், பத்தாம் வகுப்பு, ப்ளூ ஸ்டார் ஆங்கில உயர்நிலைப் பள்ளி, புதுச்சேரி

252) க.கௌசல்யா, ஐந்தாம் வகுப்பு, நியூ பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை - 88

253) ஆர்.மதிவதனா, ஏழாம் வகுப்பு, பி.எஸ்.சி. பள்ளி, விருதுநகர்

254) பா.நவீன்குமார், பதினொராம் வகுப்பு, வெள்ளையன் செட்டியார் மேனிலைப் பள்ளி, எண்ணூர்

255) ஏ.சுமதி, ஆறாம் வகுப்பு, மாநகராட்சி மகளிர் மேனிலைப் பள்ளி, திருநெல்வேலி

'கோகுலம் சிறுவர் சங்கம்' பட்டியல் இந்த மாதமும் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது மற்றும் மூன்றாவது அட்டைகளில்!

256) ஏ.ஜி.விஸ்வநாதன், எட்டாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஆரணி
257) ஜி.சாயிலெட்சுமி, ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ சாரதா மேனிலைப் பள்ளி, அரியகுளம்
258) என். ஸ்ரீகாந்த், முதலாம் வகுப்பு, ஜி.கே.டி. மெட்ரிக் மேனிலைப் பள்ளி, கோயம்புத்தூர்
259) ஆர்.பிரியங்கா, ஒன்பதாம் வகுப்பு, மகாலெட்சுமி பெண்கள் மேனிலைப் பள்ளி, வத்தலக்குண்டு
260) வ.நா.சஞ்சய், ஐந்தாம் வகுப்பு, பி.கே.டி. மெட்ரிகுலேஷன் பள்ளி, பொள்ளாச்சி
261) ர.மீனாட்சி, ஏழாம் வகுப்பு, அண்ணா ஜெம் அறிவியல் பூங்கா பள்ளி, சென்னை - 25
262) க.மு. கார்த்திகேயன், ஆறாம் வகுப்பு, மேரி இமாக்குலேட் மெட்ரிக் பள்ளி, மதுரை
263) ஏ.ஏ. மீரா அப்ரோஸ், எட்டாம் வகுப்பு, பெத்தல் மெட்ரிக் ஹையர் செகண்ட்ரி பள்ளி, ஏர்வாடி
264) ரா.பிரதீப்குமார், பத்தாம் வகுப்பு, காமராஜ் மேனிலைப் பள்ளி, நம்பியூர்



265) ச.சந்தியா, மூன்றாம் வகுப்பு, ஸ்ரீ ரங்கா வித்யாலயா, செங்குட்டைக்காடு
266) அ.சுரேஷ்குமார், பத்தாம் வகுப்பு, காமராஜ் மேனிலைப் பள்ளி, நம்பியூர்
267) பு.ஸ்ருதி, நான்காம் வகுப்பு, தூய இருதய ஆரம்பப் பள்ளி, தஞ்சாவூர்
268) ஜெ.அமர்நாத், காமராஜ் மேனிலைப் பள்ளி, நம்பியூர்
269) ஆ.மகாலட்சுமி, மூன்றாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி, காயக்காடு
270) எஸ்.சண்முக சுந்தரம், பதினொராம் வகுப்பு, எம்.ஏ.கே.பள்ளி, சென்னை - 78
271) கே.சங்கரி, நான்காம் வகுப்பு, ஸ்ரீ விஜய்சாந்தி ஜெயின் வித்யாலயா, திருப்பத்தூர்
272) எம்.ஆன்றோ சஜின் சேவியர், எட்டாம் வகுப்பு, தூய பிரான்சிஸ் சேவியர் மேனிலைப் பள்ளி, மாங்குழி
273) பி.பொன் ஹர்ஷிதா, முதலாம் வகுப்பு, எஸ்.பி.ஓ.ஏ.பள்ளி, மதுரை
274) நா.ஜனார்த்தனம், பத்தாம் வகுப்பு, காமராஜ் மேனிலைப் பள்ளி, நம்பியூர்
275) எம்.ஷிவானி, ஆறாம் வகுப்பு, ஸ்ரீ ராமகிருஷ்ண குருகுலம் மெட்ரிக் பள்ளி, உளுந்தூர்பேட்டை
276) வருண் ஸ்ரீ வத்ஸன், மூன்றாம் வகுப்பு, இந்து காலனி செல்லம்மாள் வித்யாலயா சீனியர் மேனிலைப் பள்ளி, சென்னை
277) ஏ. ஹம்சத்தவ்ஹா, நான்காம் வகுப்பு, ஹமீதியா மெட்ரிக் மேனிலைப் பள்ளி, கீழக்கரை
278) எம்.எஸ். சொஹைல் அஹ்மத், எட்டாம் வகுப்பு, [illegible]

அகாடமி பள்ளி, கீழக்கரை



279) கி.வெ.பத்மஜா, ஒன்பதாம் வகுப்பு, சோரடியா மேனிலைப் பள்ளி, கடலூர்

280) சி.பிரபு, ஆறாம் வகுப்பு, குறிஞ்சி தேசிய ஆரம்ப தமிழ் பள்ளி, சிலாங்கூர், மலேசியா

281) மு.திவ்யா, ஏழாம் வகுப்பு, ஜவஹர் பள்ளி, நெய்வேலி

282) எம்.யோகராஜ், பத்தாம் வகுப்பு, வைரவிழா மேனிலைப் பள்ளி, கோபி

283) வி.பிரகாஷ், பன்னிரண்டாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளி, பள்ளிபாளையம்

284) கே.ரஞ்சனா, மூன்றாம் வகுப்பு, விவேகானந்தா வித்யாலயா, சென்னை - 9

285) சி.திபாகர், பத்தாம் வகுப்பு, தமிழ் மத்திய மகா வித்தியாழம், இலங்கை

286) எஸ்.ஜானு, ..., கமலாவதி மேனிலைப் பள்ளி, ஆறுமுகநேரி

287) எஸ்.தங்கம்............., கமலாவதி மேனிலைப்பள்ளி, ஆறுமுகநேரி

288) எஸ்.விவேக், எட்டாம் வகுப்பு, நா.சு.வி.வி. ஆண்கள் மேனிலைப் பள்ளி, பட்டிவீரன்பட்டி

289) ஏ.அஜின், பதினொராம் வகுப்பு, அரசு மேனிலைப் பள்ளி, முன்சிறை

290) பு.இந்துமதி, பதினொராம் வகுப்பு, எஸ்.எஸ்.கே.வி. மேனிலைப் பள்ளி, காஞ்சிபுரம்

291) கோ.லோகேஷ்வரன், முதலாம் வகுப்பு, சரஸ்வதி மெட்ரிக் பள்ளி, விழுப்புரம்

292) கு.அ.தமிழ்மொழி, ஒன்பதாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளி, புதுச்சேரி

293) கு.அ.அறிவாளன், ஆறாம் வகுப்பு, அரசு உயர்நிலைப் பள்ளி, புதுச்சேரி

294) ம.பார்த்தசாரதி, மூன்றாம் வகுப்பு, சன் வித்யாலயா நர்ஸரி தொடக்கப் பள்ளி, அகரம்

295) மீ.தேவிபாலா, பத்தாம் வகுப்பு, சின்மயா வித்யாலயா, இராஜபாளையம்



296) வி.திலக் ராஜ்குமார், ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ சாரதா பாலமந்திர் ஆண்கள் பள்ளி, சேலம்

297) எஸ். அஸ்வினி, பதினொராம் வகுப்பு, ரோட்டரி லஹரி மெட்ரிக் மேனிலைப் பள்ளி, மதுரை

298) அ.ஹரி அநிருத், மூன்றாம் வகுப்பு, புனித அன்னாள் ஆங்கிலப் பள்ளி, இலால்குடி

299) ச.சங்கவை, ஏழாம் வகுப்பு, த.ஆ.வே.பெல் பள்ளி, இராணிப்பேட்டை

300) கே.வி.சுரேந்தர், ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ சாய்மெட்ரிக் பள்ளி, திருப்பூர்

ஏட்டிக்குப்



ஓர் ஊரில் ராஜா, ரவி என்ற இருவர் அடுத் தடுத்த வீடுகளில் இருந் தனர். வெளியே நட் புடன் பழகினாலும் இரு வரும் எப்போதும் ஏட் டிக்குப் போட்டியாக நடப் பார்கள்.



ஒருநாள் ராஜா தனது மகனை அழைத்து, ''அவ சரமாக கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறேன். 'இங்க்' தீர்ந்துவிட்டது. நீ பக்கத்து வீட்டு ரவி மாமாவிடம் சென்று, பேனா வாங்கி வா'' என்றார்.




ராஜாவின் மகன் சென்று, ரவியிடம் கேட்டான். அவரோ, ''அதெல்லாம் கொடுத்து அனுப்ப முடியாது. வேண்டு மென்றால் உன் அப்பாவை இங்கேயே வந்து எழுதச் சொல். தருகிறேன்'' என் றார்.



மகன் வந்து விஷ யத்தை சொன்னான். ''ஓஹோ! அவ்வளவு நம் பிக்கை இல்லையா? இப் போது அப்படியே செய் கிறேன். இன்னொரு நாள் சரியான பதிலடி தரு கிறேன்'' என்றார் ராஜா.

போட்டி!

கதை : வெ.பிரகாஷ்
12-ஆம் வகுப்பு, அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளி, பள்ளிபாளையம்
படங்கள் : பிள்ளை



நாட்கள் சென்றன. பொங்கலுக்கு முந்தின நாள் ரவி, தனது வீட்டில் ஒட்டடை அடித்துக் கொண்டிருந்தார். அப்போது ஒட்டடைக் குச்சி உடைந்து விட்டது.



“அடடா! குச்சி உடைஞ்சு போச்சே! இப்ப என்ன செய்யறது? வள்ளி, இங்கே வா” என்று அழைக்க, அவர் மகள் வள்ளி வந்தாள்.



“நீ ராஜா மாமா வீட்டுக்குப் போய் ஒட்டடைக் குச்சி இரவல் வாங்கி வா” என்றார். வள்ளியும் “சரிப்பா” என்று கூறி விட்டுச் சென்றாள். சற்று நேரத்தில் திரும்பிய வள்ளி...



...“அப்பா ஒட்டடைக் குச்சியைக் கொடுக்க மாட்டாராம். ‘வேண்டுமானால், என் வீட்டிலேயே வந்து ஒட்டடை அடிக்கச் சொல்’ என்று சொன்னார்ப்பா” என்றாள். ரவிக்குத் தலை சுற்றியது.





ஹாக்கி!

கி.வேல்முருகன்

● இந்தியாவின் தேசிய விளையாட்டு ஹாக்கி.

● இடைக்காலத்தில் பிரான்ஸ் நாட்டில் விளையாடப்பட்ட Hoquet என்ற விளையாட்டில் இருந்தே ஹாக்கி தோன்றியது. இந்த வார்த்தைக்கு 'ஆட்டு இடையரின் குச்சி' என்று பொருள்.

● கி.பி.16 ஆம் நூற்றாண்டில் நெதர்லாந்து நாட்டில் விளையாடப் பட்ட 'கால்வ்' என்ற விளை யாட்டானது ஹாக்கியோடு நெருங்கிய தொடர்புடையது.

● 1875 - ஆம் ஆண்டு லண்டனில், உலகின் முதல் ஹாக்கி அசோசியேஷன் தொடங்கப்பட்டது.

● 1895 ஆம் ஆண்டு நடைபெற்ற 'முதல் சர்வதேச ஹாக்கி போட்டி' அயர்லாந்து - வேல்ஸ் நாடு களுக்கிடையே நடந்தது.

● 1908-ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் ஒலிம்பிக் ஹாக்கி போட்டியில் தங்கம் வென்ற நாடு - இங்கிலாந்து.

● 1928 முதல் 1956 ஆம் ஆண்டு வரையில் தொடர்ந்து ஆறு ஒலிம்பிக் ஹாக்கி போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்றது.

● 1960 ஆம் ஆண்டு ரோமில் நடைபெற்ற ஒலிம்பிக் ஹாக்கி போட்டியில் முதன்முதலாக இந்தியா - பாகிஸ்தானிடம் தோல்வி அடைந்தது.

● 1964, 1980 - ஆம் ஆண்டுகளில்





2008





தெரியுமா?

நடைபெற்ற ஒலிம்பிக் ஹாக்கி போட்டிகளில் இந்தியா தனது ஏழாவது, எட்டாவது வெற்றிகளை பெற்றது.

- 'இந்திய ஹாக்கியின் மாந்திரீகர்' (Wizard of Indian Hockey) என்று சிறப்பிக்கப்படுபவர் - 'த்யான் சந்த்' ஆவார்.
- த்யான் சந்த்- பிறந்த நாளான ஆகஸ்ட் 29ஆம் தேதி ஒவ்வொரு ஆண்டும் 'இந்தியாவின் தேசிய விளையாட்டு தினமாக' கொண்டாடப்பட்டு வருகிறது.
- இந்தியாவிலுள்ள ஹாக்கி கோப்பைகளிலேயே மிகவும் பழமையானது 'பெய்டன் கப்'.
- 1971 ஆம் ஆண்டு முதல் உலகக் கோப்பை ஹாக்கி போட்டி நடைபெறுகிறது.
- 1975 ஆம் ஆண்டு கோலாலம்பூரில் (மலேஷியா) நடைபெற்ற மூன்றாவது உலகக் கோப்பை ஹாக்கி போட்டியில், இந்தியா தங்கம் வென்றது.
- 1975 ஆம் ஆண்டு பெண்களுக்கான முதல் உலகக் கோப்பை ஹாக்கி போட்டியானது இங்கிலாந்தில் நடைபெற்றது.
- 1982 ஆம் ஆண்டு 'முதல் ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டி' கராச்சியில் நடைபெற்றது.

குட்டீஸ் கோகுலம்

என்னைப் போல யாரு?

கீழே உள்ள
நான்கு பேரும்
என்னை மாதிரியே
இருந்தாலும்
சின்னச் சின்ன
மாற்றங்கள்
இருக்கு.
அப்படியே
என்னைப் போல
இருப்பது
யாருன்னு
கண்டுபிடியுங்க!





விடை : எண் 2



தொல்லை தரும் தொலைக்காட்சி!



டாக்டர் கு.கணேசன்

இன்றைய குழந்தைகள், தினமும் சாப்பிடாமல்கூட இருந்து விடுவார்கள். ஆனால் தொலைக்காட்சி பார்க்காமல் இருக்க மாட்டார்கள். தொடர்ந்து பல மணி நேரம் தொலைக்காட்சி பார்ப்பதால் எத்தனை தொல்லைகள் வருகின்றன, தெரியுமா? அண்மையில் பாஸ்டன் நகரில் உள்ள குந்தைகள் மருத்துவமனையில் ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்தக்





குழுவின் தலைவராகச் செயல்பட்ட டாக்டர் 'டேவிட் லுட்விக்' தங்கள் ஆய்வு முடிவுகளை வெளியிட்டபோது பல திடுக்கிடும் தகவல்கள் தெரியவந்தன.

அதாவது ''குழந்தைகள், தினமும் இரண்டு மணி நேரத்துக்கு மேல் தொடர்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்தால், அவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும்போது ஆறு முக்கிய பிரச்னைகள் உருவாகின்றன'' என்கிறார் அவர். அவை, உடற்பருமன், இரத்தத்தில் கொழுப்பு சேருதல், மனச்சோர்வு, பார்வைக் கோளாறுகள், நீரிழிவு நோய், வன்முறை உணர்வு.

நீண்ட நேரம் தொலைக்காட்சி முன் உட்கார்ந்திருக்கும்போது உடல் உறுப்புகள் மிகக் குறைவாகவே இயங்குவதால், உடலில் சக்தி குறைவாக செலவாகிறது. இவ்வாறு மீதமாகும் சக்தி கொழுப்பாக மாறி சேமிக்கப்படுகிறது. இதனால் உடல் எடை அதிகமாகி உடற்பருமன் உண்டாகிறது. தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தில் சிப்ஸ், சீவல் என்று கொழுப்பு நிறைந்த நொறுக்குத் தீனிகளை அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டு விடுகிறார்கள். தவிர, விளையாடுவது குறைந்து உடற்பயிற்சி இல்லாமல் போகிறது. இதுவும் உடற்பருமன் உண்டாக ஒரு முக்கிய காரணம்.


தொடர்ந்து தொலைக்காட்சி பார்க்கும்போது மன இறுக்கம், மனச் சோர்வு போன்றவை உண்டாகின்றன. தொலைக்காட்சி பார்த்துவிட்டு பாடங்களைப் படிக்கத் துவங்கும் போது, பாடங்களில் முழு கவனம் செலுத்த முடிவதில்லை. இதன் காரணமாக, படிப்பு கெடுகிறது.

பெரும்பாலான சிறுவர்கள் தொலைக்காட்சிப் பெட்டிக்கு மிக அருகில் அமர்ந்துகொண்டு நிகழ்ச்சிகளைப் பார்க்கிறார்கள். இதன் விளைவால், கண் பாதிக்கப்படுகிறது. கிட்டப் பார்வை, தூரப் பார்வை போன்ற பார்வைக் கோளாறுகள் சிறுவயதிலேயே வந்துவிடுகின்றன. இன்றைய குழந்தைகளில் கண்ணாடி அணிவோர் எண்ணிக்கை அதிகமாகி வருவதற்கு தொலைக்காட்சியும் ஒரு காரணம்.

''ஒரு நாளில் மூன்று மணி நேரத்துக்கு மேல் தொலைக்காட்சி பார்க்கும் குழந்தைகளுக்கு நீரிழிவு நோய் வரும் வாய்ப்பு மூன்று மடங்கு அதிகரிக்கிறது'' என்கிறார் டாக்டர் டேவிட் லுட்விக்.

இன்று சிறுவர் சிறுமிகள் விரும்பிப்

பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் அதிகமாக இடம் பெறுபவை பழிக்குப் பழி வாங்கத் தூண்டும் துப்பாக்கி மற்றும் வாள்வீச்சு சண்டைக் காட்சிகள்தான். இந்தக் காட்சிகள் மனத்தில் தினந்தோறும் பதியும் போது வன்முறை உணர்வுகள் அதிகமாகி, நல்ல ஒழுக்க உணர்வுகள் குறைந்து விடுகின்றன.



அப்படியென்றால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் நல்லவையே இல்லையா என்று கேட்கலாம். மற்ற நிகழ்ச்சிகளோடு ஒப்பிடும்போது நல்ல நிகழ்ச்சிகள் மிகக் குறைந்த அளவில்தான் உள்ளன. அவற்றைத் தேடிப் பிடித்துப் பார்க்க வேண்டும். உங்கள் அறிவை வளர்க்கும் நிகழ்ச்சிகளையும், உங்களைச் சிந்திக்கத் தூண்டும் நிகழ்ச்சிகளையும் நல்ல நகைச்சுவை நிகழ்ச்சிகளையும் தினமும் அரைமணி நேரம் பார்க்கலாம். விடுமுறை தினமானால் ஒரு மணிநேரம் பார்க்கலாம். தொடர்ந்து, அமர்ந்த நிலையிலேயே பார்க்கக் கூடாது. அரைமணி நேரத்துக்குப் பிறகு எழுந்து சிறிது நடந்துவிட்டு வர வேண்டும்.



தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது, அவ்வப்போது பார்வையைத் திருப்பி வெளியில் உள்ள பொருட்களைப் பார்க்க வேண்டும். அப்போதுதான் கண்கள் சோர்வு அடைவதைத் தடுக்க முடியும். கண்கள் சோர்வடைந்தால் தலைவலி, கழுத்துவலி போன்ற தொல்லைகள் வரும்.

தொலைக்காட்சிப் பெட்டிக்கும் நீங்கள் அமர்ந்திருக்கும் இடத்துக்கும் இடையில் குறைந்தது பத்தடி இடைவெளி இருக்க வேண்டும். தொலைக்காட்சிப் பெட்டிக்கு நேராக அமர்ந்து கொண்டு நிகழ்ச்சிகளைப் பார்ப்பதும், உங்கள் கண்ணின் உயரமும் தொலைக்காட்சிப் பெட்டியின் உயரமும் சமமாக இருப்பதும் முக்கியம்.

எனவே, அளவாகப் பயன்படுத்தினால் தொலைக்காட்சி அமிர்தம். இல்லையெனில் விஷம் என்பதை உணர்ந்து செயல்படுங்கள். சரியா?○

ஒரு பசுமையான காட்டில் ஒரு ஆமையும் கொக்கும் நண்பர்களாக இருந்தன. அவர்களின் நட்பைப் பார்த்து, காட்டில் இருந்த மற்ற விலங்குகள் வியந்தன. அவை இரண்டும் எப்போதும் ஒன்றாகவே விளையாடும். ஆமைக்குத் தேவையானதை கொக்கும், கொக்குக்



நெடுங்கதை

2008

நண்பனே! நண்பனே!

ஜா. நந்தா

குத் தேவையானதை ஆமையும் கொடுத்து பகிர்ந்து உண்டு வாழ்ந்தன. ஆனாலும் இவற்றிடையே ஒரு குறை இருக்கத்தான் செய்தது. ஆமை மிக நட்பாக இருந்தபோதும், கொக்கு அவ்வப்போது ஏதாவது இடைஞ்சல் செய்துவிடும். எனினும் ஆமை இதை பொருட்படுத்தியதே இல்லை.

அந்தக் காட்டில் ஒரு நரியும் இருந்தது. அதற்கு 'கொழுகொழு' வென்று இருந்த கொக்கைப் பிடித்து உண்ண ஆசை! அதற்கு பலவாறாக யோசித்துக் கொண்டிருந்தது.



இந்தச் சமயத்தில் கொக்குக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. கொக்கைக் காணாமல் தவித்த ஆமை, அதன் வீட்டுக்கு வந்தது. கொக்கு முனகிக் கொண்டிருந்தது.

கொக்கின் நிலையைக் கண்டு பதறிப்போன ஆமை, அதன் அருகில் சென்று தனது முன் கையால் தடவிக் கொடுத்தபடி, ''என்ன நண்பனே இது? உனக்கு என்ன ஆச்சு?'' என்று கவலையுடன் கேட்டது.

ஆமையின் குரல் கேட்டு, சிரமத்துடன் தலை உயர்த்திய கொக்கு, ''நண்பா, எனக்கு நேற்று இரவு முதல் காய்ச்சலாக இருக்கிறது. காலையில் டாக்டரிடம் போனேன். அவர், இது சிக்குன்குனியா காய்ச்சல். மனிதர்களிடம் இருந்து வந்திருக்கிறது'' என்று சொல்லி மருந்து கொடுத்திருக்கிறார். இது எளிதில் அடுத்தவருக்குத் தொற்றிவிடுமாம். அதனால் நீ உடனே புறப்படு. என் அருகில் இருந்தால் உனக்கும் வந்துவிடும்'' என்று கூறியது.

''முடியாது நண்பா! நான் இங்கே தான் இருப்பேன். உன்னை கவனித்துக்கொள்வேன். உன் உடல்நிலையைத் தேற்றுவதுதான் என் முதல் வேலை'' என்று கூறிய ஆமை, தன் செல்போனை எடுத்து, வீட்டுக்கு போன் செய்து, தான் வீட்டுக்கு வர சில நாட்களாகும் என்று கூறியது.

அதன்பிறகு கொக்கின் உடல்நிலை, ஆமையின் அன்பான கவனிப்பால் விரைவாகத் தேறியது. காய்ச்சல் முழுமையாக குணமானாலும் அசதி மிகுதியாக இருந்தது. ஓய்வு எடுத்தால் போதும் என்று டாக்டரும் சொன்னார்.


கொக்கின் உடல்

நிலை தேறியதால் ஆமை, இரண்டொரு நாளில் மீண்டும் வருவதாகச் சொல்லி தன் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றது.

கொக்கு அசதியுடன் இருப்பதை அறிந்த நரி, இதுதான் சரியான சமயம் என்று அதை நெருங்கியது.

நரியை திடீரென அருகில் கண்டதும், பயந்து நடுங்கிய கொக்கு, தப்பிக்க வழியின்றித் தவித்தது. அதற்கு ஒரு யோசனை தோன்றியது. ''நரியாரே! நீங்கள் இதுவரை என்னைப் போன்ற பறவைகளை உண்டிருப்பீர்கள். ஆனால் ஆமையை சுவைத்திருக்க மாட்டீர்கள். நீங்கள் என்னை விட்டுவிட்டால் நான் ஆமையை உணவாகத் தருகிறேன்'' என்றது.





நரியும் யோசித்தது. ''சரி. நான் உன்னை விட்டு விடுகிறேன். நீ எனக்கு ஆமையை உணவாக்க வேண்டும். ஏமாற்றினால் சும்மா விட மாட்டேன்'' என்று மிரட்டிவிட்டுச் சென்றது. ஆமையை நரியிடம் எப்படி கொண்டு செல்வது என்று யோசித்த கொக்கு, ஒரு யுக்தியைக் கண்டுபிடித்தது.

மறுநாள் கொக்கினைப் பார்க்க ஆமை வந்தது. கொக்கு, ''நண்பனே! நமது காட்டின் நடுவில் உள்ள குளத்தின் வடக்குக் கரையில் சில மூலிகைகள் உள்ளனவாம். அதைச் சாப்பிட்டால் விரைவில் குணமடையலாம் என்று என் அத்தை கூறினார். நீயும் என்னுடன் வருகிறாயா? துணையாக இருக்கும்'' என்று கேட்டது.

ஆமை, ''எனக்குத் தெரியாத குளக்கரையா? நீ சொல்லுமிடத்தில் மூலிகை ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. நீ சொல்லும் இடம் சரிதானா?'' என்று வினவியது.

ஏதேது? ஆமைக்கு விஷயம் தெரிந்துவிட்டதா? ஏன் தயங்குகிறது? என்று திடுக்கிட்ட கொக்கு, சமாளித்துப் பேசியது. ''ஆம் நண்பா! நான் நன்றாக விசாரித்து விட்டேன். குளக்கரையின் வெளிப் பக்கத்தில் இருக்கிறதாம். உன் கண்ணில் பட்டிருக்காது. வா! நாம் போய் தேடிப் பார்க்கலாம்'' என்று அழைத்தது.

ஆமை தயங்கினாலும் புறப்பட்டது. நண்பர்கள் இருவரும் காட்டில் இருந்த ஒற்றையடிப் பாதையில்

பழைய நினைவுகளை பேசிக் கொண்டே மெதுவாக நடந்து சென்று குளக்கரையை அடைந் தன. அங்கே தயாராகக் காத் திருந்த நரி, புதர் மறைவிலிருந்து ஆவலுடன் வெளியே வந்தது.

''நன்றி, கொக்காரே! சொன்ன படி செய்தமைக்கு பாராட்டுக்கள்! இனி ஆமை எனக்கு. நீ செல்ல லாம்'' என்று விடைகொடுத்தது.

கொக்கு குற்ற உணர்வுடன் ஆமையைப் பார்க்கக்கூட தைரி யம் இல்லாமல் திரும்ப எத்தனித் தது. நரி ஆவலுடன் ஆமையை நெருங்கியது. அப்போது ஆமை, ''நரியாரே! சற்றே பொறுங்கள். நான் தங்களுக்கு உணவாகு முன் என் ஆருயிர் நண்பர னுடன் சிறிது பேச வேண் டும்'' என்று கூறியது. நரியும் சம்மதித்தது.



நட்புக்கு துரோகம் செய்து விட்ட குற்ற உணர்வுடன் தலை குனிந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த கொக்கின் அருகில் சென்றது.

''நண்பா! நீ இப்படிச் செய்வாய் என்று நான் நேற்றுவரை நினைக்க வில்லை. நரியார் நேற்று உன்னிடம் பேசிக்கொண்டிருந்தபோது நான் அதை தற்செயலாகக் கேட்க நேர்ந்தது என்றாலும், அந்தச் சமயத்தில் ஆபத் தில் இருந்து தப்பிக்க தந்திரமாகப் பேசுகிறாய் என்று நினைத்தேன். ஆனால் நான் ஏமாந்துவிட்டேன். உண்மையான நட்புக்கு நீ வஞ்சகம் இழைத்துவிட்டாய். போகட்டும். என் நண்பனின் உயிரைக் காக்க எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது என்று நிம் மதியுறுகிறேன். ஆனால், நண்பா, இனி வேறு யாரையும் இவ்வாறு வஞ்சித்து விடாதே. நமது நட்பைப் பற்றி இந்தக் காடு முழுவதும் பெரு மையாகப் பேசினார்களே. அவ் வளவும் பொய்யாகிப் போய்விட்டதே. என்னை இவ்வாறு வஞ்சித்த பிறகு உன்னை யாரும் விரும்புவார்களா? உன்னைக் கண்டாலே அனைவரும் ஒதுங்கிப் போய்விடுவார்கள். இனி யாவது எல்லோருக்கும் உண்மை யானவனாக இரு'' என்று அமைதி




யாகக் கூறிவிட்டு நரியிடம் வந்தது.

''நரியாரே, நான் தயார். என்னை உணவாக்கிக்கொள்ளுங்கள்'' என்று கூறி கண்களை இறுக மூடிக்கொண்டது.

ஒரு நிமிடம்... இரண்டு நிமிடம்...பயத்தில் ஆமையின் இதயமே வெளியில் வந்துவிடும்போல 'தடக் தடக்' என்று துடித்தது. உடலோ வெளிறிப்போனது. நரி கொல்ல வேண்டாம். அச்சத்திலேயே உயிர் போய்விடும் போலிருந்தது. அப்போது கொக்கு அலறும் சத்தத்தைக் கேட்டு ஆமை திடுக்கிட்டு கண் திறந்தது. நரியின் வாயில் கொக்கு கடிபட்டு துடித்துக்கொண்டிருந்தது.

ஆமை, ''நரியண்ணே! வேண்டாம், என் நண்பனை விட்டு விடுங்கள். நான்தான் உங்களுக்கு இரையாவதற்குத் தயாராக இருக்கிறேனே'' என்றது. நரி கொக்கை இறக்கிவிட்டது. பிறகு, ''நண்பனுக்காக உயிரையும் விடத் துணிந்த உன்னைப் பாராட்டுகிறேன். உனக்காக இவனை விடுகிறேன்'' என்று கூறிவிட்டுச் சென்றது.

கொக்கு ஆமையிடம் மன்னிப்பு கேட்டது. அதன் பிறகு இருவரும் உண்மையான நட்புடன் பழகினர். ○





உருகும் உலகம்!

அருண் சரண்யா

பள்ளிக்கூடத்தில் என்னவெல்லாம் செய்வீர்கள்? பாடம் படிப்பீர்கள், நண்பர்களோடு பேசுவீர்கள், பள்ளி மைதானத்தில் விளையாடுவீர்கள். ஆனால் கேரள மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பள்ளியின் மாணவர்கள், திரைப்படத்தை உருவாக்கி இருக்கிறார்கள்.

கொல்லம் மாவட்டம், 'பட்டதானம்' என்ற நகரில் உள்ள அரசுப் பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர்களும் மாணவர்களுமாக இணைந்து ஒரு குறும்படத்தைத் தயாரித்து இருக்கிறார்கள்.

'உருகும் பூமிக்கு ஓர் ஆறுதல்' என்கிற இந்தப் படத்தின் கதாநாயகன் ஆனந்த் பாபு ஐந்தாம் வகுப்பு மாணவன். சுதந்திர நாளன்று கொடியேற்றி தலைமை ஆசிரியர், 'யாரும் பிளாஸ்டிக்கைப் பயன்படுத்தக் கூடாது. அது உலகுக்கு, நாம் செய்யும் துரோகம்' என்று உரை நிகழ்த்துகிறார். ஆனந்த் பாபுவுக்குக் குழப்பம். பிளாஸ்டிக்கினால் எவ்வளவு பிரயோஜனம்! அதை ஏன் ஒதுக்க வேண்டும்?

இதே எண்ணத்தில் இருக்கும் ஆனந்த்பாபு, அடுத்த நாள் பாதி வகுப்பில் எழுந்து ''டீச்சர், எனக்கு ஒரு சந்தேகம். பிளாஸ்டிக்கை ஏன் பயன்படுத்தக் கூடாது?'' என்கிறான். பாடத்துக்கு சம்பந்தமில்லாத கேள்வி என்பதால் பிற மாணவர்கள் சிரிக்கிறார்கள். ஆனால்

ஆசிரியை பொறுமையாக பதில் சொல்கிறார்.

பிளாஸ்டிக் விரைவில் மக்குவதில்லை. அது எரிக்கப்படும்போது நச்சு வாயுக்கள் உருவாகின்றன. பூமி, ஆகாயம், நீர் ஆகிய மூன்று முக்கிய இயற்கை சக்திகளுக்கு பிளாஸ்டிக் கேடு விளைவிக்கிறது என்பதை விளக்குகிறார். முக்கியமாக சாலை ஓரங்களிலும், காடுகளிலும் எறியப்படும் பிளாஸ்டிக் பொருள்களை உட்கொள்வதால் மாடு, மான் போன்ற மிருகங்களின் உடல்நலம் கெடுவதையும், உணவில் பிளாஸ்டிக் பொருள் கலந்திருந்ததால் ஒரு யானை இறந்து விட்டதையும் அறியும்போது அவன் திடுக்கிடுகிறான்.



பிளாஸ்டிக்கின் கேடுகள் ஆனந்த்பாபுவுக்குப் புரிகிறது. வீட்டுக்குப் போகும்போது ஓர் இளம் செடி வாடியிருப்பதைப் பார்க்கிறான். அதைச் சுற்றித் தோண்டிப் பார்க்க, அங்கே நிறைய பிளாஸ்டிக் கழிவுகள். அதனால்தான் மண்ணில் உள்ள சத்துக்களை வேர்களால் இழுத்துக் கொள்ள முடியவில்லை. பிளாஸ்டிக் கழிவுகளை தூர எறிந்து விட்டு அந்தச் செடியை நடுகிறான்.

மளிகைக் கடையில் பொருள்களை பிளாஸ்டிக் பைகளில்தான் போட்டுக் கொடுக்கிறார்கள். ஆனந்த்பாபு அந்தக் கடைக்குச் செல்லும்போது ஒரு பெரிய காகிதப் பையில் மளிகை சாமான்களைப் போட்டுச் செல்கிறான். இப்படி தானே ஓர் உதாரணமாக இருக்க, பள்ளியில் மற்றவர்களும் அவனை பின்பற்றத் தொடங்குகிறார்கள்.



அறிவியல் ஆசிரியர் எஸ்.கண்ணன் என்பவர் இந்தக் குறும்படத்தை இயக்க, உதவி இயக்குநராக பணியாற்றி இருப்பது நிஃபின் எனும் ஏழாம் வகுப்பு மாணவன். கலை, ஒளிப்பதிவு, தொகுப்பு, திரைக்கதை, அனைத்திலும் மாணவர்களின் பங்கு அதிகம்.

இந்தப் படத்தை கேரளாவில் உள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் முதல் கட்டமாக திரையிடப் போகிறார்கள். ''பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைத்துக் கொள்ளுங்கள். பிளாஸ்டிக்கை மறுசுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்துங்கள்'' என்பது வலியுறுத்தப்படுகிறது.

நீங்களும் உங்கள் பள்ளியில் ஏதாவது புது முயற்சிகளை எடுத்து சமூகத்துக்கு நல்லது செய்யுங்களேன்! ◎

போட்டி 2008

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்தி செய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி! முடிவு தேதி 13.1.2008

பரிசு ரூ.1000/-



அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,

ஈக்காடுதாங்கல், சென்னை - 32

விடையைச் சொல்; பரிசை வெல் - 7

1. 'தி வாட்டர் ஹார்ஸ்' திரைப்படத்தின் இயக்குநர் ....
2. கணேசனுக்கு, பார்வதிதேவி தயாரித்துக் கொண்டிருந்த உணவு ....
3. பிராய்ரிஸ் புல்வெளிக்கு தேவைப்படும் மழையின் அளவு ....
4. இந்திய ஹாக்கியின் மாந்திரீகர் எனப்படுபவர் ....
5. எவரெஸ்ட் உச்சியை அடைய உள்ள வழிகளின் எண்ணிக்கை ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

சீன நாட்டில் புத்தாண்டு தினத்துக்கு முன்பே வீட்டை நன்கு சுத்தம் செய்து விடுவார்கள். பிறகு துடைப்பம் மற்றும் சுத்தம் செய்யும் பொருட்களை, பரணில் வைத்துவிட வேண்டும். புத்தாண்டு தினத்துக்கு அடுத்தநாள் வீட்டைப் பெருக்கலாம். ஆனால், அப்படிப் பெருக்கி ஒன்றாக்கிய தூசிகளை ஐந்து நாட்கள் கழித்தே வெளியில் கொட்டுவார்கள். புத்தாண்டு பிறக்கும்போது வீட்டின் கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து வைப்பார்கள். பழைய வருடம் செல்வதற்கு வழி கிடைக்க வேண்டுமாம்.

அன்றைய தினத்தில் கடன்

ஹேப்பி நியூ இயர்!

ஜி.எஸ்.எஸ்



கொடுக்கக்கூடாது. பேய்க் கதைகளைக் கூறக்கூடாது. கடந்த வருடம் நடந்த எதையும் பேச்சில் குறிப்பிடக்கூடாது. குழந்தைகள் விஷமம் செய்தாலும் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

படுக்கை அறையில் புத்தாண்டு வாழ்த்து சொல்வது துரதிர்ஷ்டம் அளிக்கும் என்பதால் எல்லோருமே (நோயாளிகள் உட்பட) புத்தாடை அணிந்து கூடத்தில் உட்கார்ந்துகொள்வார்கள்.





✱ சிட்னியில்...


இவர்கள் வெடி வெடித்து புத்தாண்டு தினத்தைக் கொண்டாடுவார்கள். அன்று சிவப்பு ஆடை அணிந்துகொள்வது வெகு சகஜம். இன்னொரு முக்கிய விஷயம். சீனர்களின் புத்தாண்டு என்பது ஜனவரி முதல் தேதியல்ல. ஜனவரி 15லிருந்து பிப்ரவரி 15க்குள் என்று பௌர்ணமி வருகிறதோ அன்றுதான்!

ஆஸ்திரேலியா

இங்கு ஒவ்வொரு முக்கிய நகரத்திலும் புத்தாண்டை சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். வாண வேடிக்கை நிச்சயம் இருக்கும். ப்ரிஸ்பேன் நதிக்கரையில் சுமார் ஐம்பதாயிரம் பேராவது கூடுவர். முக்கியமாக சிட்னி துறைமுகப் பகுதியில் கொண்டாட்டம் அதிகமாக இருக்கும்.

கனடா

பல்வேறு இடங்களில் இருந்தாலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் புத்தாண்டு தினத்தன்று எப்படியும் சொந்த ஊரில் கூடிவிடுவார்கள். அன்றைய முக்கியமான கொண்டாட்டம் 'ரெவேஷயன்'தான்.



✱ சீனாவில்....



அதாவது வீட்டில் தயாரித்து உண்ணும் மாபெரும் விருந்து. 'ஒட்டாவா' நகரில் விருந்தாளிகளைப் புத்தாண்டு தினத்தன்று வீட்டுக்கு வரவழைத்து கௌரவிப்பார்கள். கிராமப் பகுதியில் மலை உச்சிக்குச் சென்று பனிக் கட்டி யில் மீன்களைப் பிடிப்பது, அவற்றைச் சுட்டுச் சாப்பிடுவதும் வாடிக்கை!

ஈகுவேடார் (Ecuador)

பழைய வருடத்தை ஞாபகப்படுத்தும் வகையில் பிரமாண்டமான உருவ பொம்மைகளை உருவாக்கி, புத்தாண்டு பிறக்கும் போது அதனைக் கொளுத்துவது வழக்கம். ''விடோ'' எனும் கொண்டாட்டமும் வழிவழியாக நடைபெறுகிறது. இதில் ஒரு மனிதன் பெண்ணைப் போலவே வேடமிட்டு விதவிதமாக அழுது, சுற்றியிருப்பவர்களைச் சிரிக்க வைப்பான். அவனுக்கு அனைவரும் பணம் கொடுப்பார்கள்.

புத்தாண்டு பிறப்பதற்கு முன் ஒவ்வொருவரும் பன்னிரண்டு திராட்சை பழங்களைச் சாப்பிடுவார்கள். 'புத்தாண்டில் நடைபெற வேண்டும்' என்று ஒரு டஜன் விருப்பங்களை பட்டியலிட்டுக்கொண்டு ஒவ்வொரு திராட்சையைச் சாப்பிடும்போதும் அந்த ஆசையைக் கூற வேண்டும். அது நிறைவேறும் என்று நம்பிக்கை!

அன்றைய தினம் பலரும் அடுத்த வீட்டுக்குக்கூட, கையில் ஒரு பெட்டியுடனே செல்வர். காரணம் அன்று பெட்டியுடன் இருந்தால், நீண்ட நாட்களாக தான் போக ஆசைப்பட்ட இடத்துக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்குமாம்!

ஜப்பான்

ஜனவரி முதல் மூன்று நாட்கள் எல்லா வியாபாரங்களும் நிறுத்தி வைக்கப்படும். சில கடைகளைத் தவிர மற்றவை மூடப்பட்டிருக்கும். புத்தாண்டு தினத்தன்று, ''போனேன்காய்'' விருந்துகள் நடைபெறும் (அதாவது கடந்த வருடத்தை மறப்பதற்கான விருந்து). டோக்கியோவின் முக்கிய புத்த ஆலயமான 'மெய்லி' ஆலயத்தில் அன்று கூட்டம் அதிகமாக இருக்கும். காற்றாடி விடுவது, 'ஹனேட்சுகி' போன்ற விளையாட்டுகளில் ஈடுபடுவர். 'ஹனேட்சுகி' என்றால் என்ன தெரியுமா? ஜப்பானிய பாட்மின்டனின் பெயர்! ●



ஆரம்பம்!
கோகுலம்
அடுத்த இதழ்
ஆண்டு மலரில்...
இந்திய நாடு நம் வீடு!
கௌதம்ராம்
ஹலோ, டாக்டர் ஸ்பீக்கிங்!
டாக்டர் கு.கணேசன்
கிராமியக் கலைகள்!
அருண் சரண்யா
வீரா - சூரா!
வாண்டுதாசன்
வழக்கம் போல் கதைகள், கவிதைகள்,
புதுவிதமான போட்டி, பரிசுகள்...
ரெடியா
இருங்க
குட்டீஸ்!

தேன்மொழி – கனிமொழி

கருத்து, படம் : பிள்ளை



கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்

பெயர் மற்றும் விவரங்கள்
57-ஆம் பக்கம்


276


277


278


279


280



281


282


283


284


285


286


287


288


289


290


291


292


293


294


295


296


297


298


299


300

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 • Registered as a Newspaper in Srilanka

